Registered as a News Paper
பக்கங்கள் 06
விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 09 | (25 - 09 - 1992) | வெள்ளிக்கிழமை | ஓசை 220

## சிறையிலுள்ளோரை உறவினர் பார்வையிட முயற்சி

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இக் கைதிகளைச் சென்று பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளது உதவி கோரப்பட்டிருக்கிறது. இதற்காக யாழ். அரசாங்க அதிபர் ஏற்கனவே சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக தெரியவருகிறது. எனினும் களுத்துறைக்கு உறவினர்களை அழைத்துச் செல்வதற்கான திகதி பற்றியும் ஏனைய ஏற்பாடுகள் குறித்தும் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

# பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்க;

# ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிக்கை

## அடுத்த வாரம் ''குமாரி'' வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் ''குமாரி'' கப்பல் அடுத்த கிழமை பருத்தித்துறையை வந்தடையும் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கப்பலில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கொழும்புத்துறைமுகத்தில் வைத்து ஏற்றும் பணிகள் ஏற்

[6ஆம் பக்கம் பார்க்க]

## தேச விரோத சக்தி என குற்றச்சாட்டு

[சென்னை]

பாட்டாளி மக்கள் கட்சியை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும் என தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்திய மத்திய அரசைக் கோரியுள்ளார். இவ் வேண்டுகோளை இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவிற்கு தாம் கடிதம் மூலம் விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழக சட்டப் பேரவையில் நேற்று உரையாற்றும் போதே செல்வி ஜெயலலிதா இதனைத் தெரிவித்தார்.

அராஜகத்தை ஒரு தொழிலாகவும், தேசவிரோதத்தை ஒரு கொள்கையாகவும் பாட்டாளி மக்கள் கட்சி கொண்டுள்ளதாகவும் மேலும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள் . பாட்டாளி மக்கள் கட்சியின் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகக் கொண்டு வந்த கவன ஈர்ப்புப் பிரேரணைக்குப் பதிலளித்து பேசும் போது தமிழ்நாடு முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். பாட்டாளி மக்கள் கட்சியினர் நேற்றுத் தென் ஆர்க்காடு தாள நல்லூர் புகையிரத நிலையத்தில் அதன் அதிகாரியைக் கத்தியால் வெட்டியதையும், அவர் சிகிச்சை பெற்று வருவதையும் திருமதி பொன்னம்மாள் சுட்டிக்காட்டினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ராம்தாஸ், பண்ருட்டியை பிணையில் விட உத்தரவு

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ராம்தாஸ், பண்ருட்டி ராமச்சந்திரன் அக் கட்சியைச் சேர்ந்த மற்றும் இரண்டுபேரையும் பிணையில் விடுதலை செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். ஜனார்த்தனம் நேற்று உத்தரவிட்டார்.

இவர்கள் தனித்தனியேசென்னை பெருநகர் நீதிபதி ஒருவரின் முன் 1000 ரூபாவுக்கான உறுதிப் பத்திரங்களை அளித்ததின் பேரில் இவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்

தேச விரோத குற்றங்களுக்காகவும், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்ட விதிகளின் கீழ் இந்த நால்வரும் கடந்த திங்களன்று இரவு கைது செய்யப்பட்டனர். இவர்கள் முதலில் சனிக்கிழமை கைது செய்து விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் அதிகாரி கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணமாம்

(கொழும்பு)

## நாளை பொது விடுமுறை

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபன் பன்னிருநாட்கள்உண்ணா நோன்பிருந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட நாளைய தினத்தை வழமைபோல் பொதுவிடுமுறைதினமாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வலிகாமத்தின் அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்நாளை மாபெரும் எழுச்சிநாளாக நல்லூரில் அனுஷ்டிக்கவுள்ளனர்.

## எழுச்சி நாளுக்கான ஏற்பாடுகள் தமிழீழமெங்கும் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நிறைவை யொட்டி நாளைய தினம் அனுஷ்டிக்கப்பட இருக்கும் எழுச்சி நாளுக்கு தமிழீழம் தயாராகி வருகிறது.

திலீபனின் நினைவு நாட்களின் இறுதி நாளான நாளைய தினம் தமிழீழம் எங்கும் எழுச்சி நாள் அனுஷ்டிக்கப்பட இருப்பதால் இதற்கான தயாரிப்பு வேலைகள் நேற்று முதலே தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. பல்வேறு பிரதான வீதிகள், சந்திகள் போன்ற அனைத்துப் பகுதிகளும் சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. வீதிகளின் இடையிடையே எழுச்சிக் கோசங்களைத் தாங்கிய பெரியளவிலான பதாகைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

நினைவு நாளின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டிருந்த திலீபன் நினைவுப் பந்தல்களை விட வேறும் பல இடங்களில் மேலதிக நினைவுப்பந்தல்கள் அமைக்கப்பட்டு திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

திலீபனின் நினைவுப் பந்தல்கள் பலவற்றில் மின்விளக்கு அலங்காரங்கள் செய்யபட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது. நகரப் புறங்களில் மட்டும் அல்லாது குக்கிராமங்களில் எல்லாம் திலீபனின் நினைவுப்பந்தல்கள் அமைக்கப்பட்டு அணையாத தீபம் ஏற்றப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கும் பந்தல்களை அலங்கரிப்பதையும், அஞ்சலி செலுத்துவதையும் நள்ளிரவு வேளைகளிலும் அவதானிக்க முடிந்தது.

நாளைய எழுச்சி நாளையொட்டி யாழ்- நகரப் பகுதியில் நேற்று நினைவு ஊர்திகள் பவனியாக பிரதான வீதிகள் வழியாக எடுத்துச் செல்லப்பட்டன.

அத்துடன் தமிழீழத்தின்

[6ஆம் பக்கம் பார்க்க[

## தியாகி திலீபன் நினைவாக இன்றைய சிரமதான பணிகள்

தியாகிலெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம் பெற்றுவரும் சிரமதானப் பணிகளில் இன்றைய பணிகளாக;

கொடிகாமம் வட்டப்பிரிவில் அப்பகுதி மக்களால் மாவீரர் மண்டபம், நூல்நிலையம் என்பன துப்புரவு செய்யப்படவுள்ளன.

கைதடி வட்டப்பிரிவில் அப்பகுதி மக்களால் மறவன் புலோ றெனோ வீதி திருத்தம், கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை துப்புரவு செய்தல் கைதடி வடக்கு ஜான் பாலர் பாடசாலை துப்புரவு செய்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

## வீடியோ கடையில் திருட்டு

(குருநகர்)

## யாழ். குடாநாடு முழுவதும் திலீபன் நினைவு நிகழ்வுகள்

தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் பல எழுச்சி பூர்வமான நிகழ்

புலிகள் பொறுப்பாளர் சங்கீதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பல பொது மக்கள் கலந்து கொண்

வடமராட்சி கிழக்கின் பிரதான வீதிகளான பருத்தித்துறை - மருதங்கேணி வீதி, மருதங்கேணி - குடாரப்பு வீதி

## பிணையில் விட உத்தரவு

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ராம் தாஸ், பண்ருட்டி ராமச்சந்திரன் அக் கட்சியைச் சேர்ந்த மற்றும் இரண்டுபேரையும் பிணையில் விடுதலை செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எஸ். ஜனார்த்தனம் நேற்று உத்தரவிட்டார்.

இவர்கள் தனித்தனியேசென்னை பெருநகர் நீதிபதி ஒருவரின் முன் 1000 ரூபாவுக்கான உறுதிப் பத்திரங்களை அளித்ததின் பேரில் இவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

தேச விரோத குற்றங்களுக்காகவும், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்ட விதிகளின் கீழ் இந்த நால்வரும் கடந்த திங்களன்று இரவு கைது செய்யப்பட்டனர். இவர்கள் முதலில் சனிக்கிழமை கைது செய்து விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

சம்பவங்கள் தொடர்பாகக் கொண்டு வந்த கவன ஈர்ப்புப் பிரேரணைக்குப் பதிலளித்து பேசும் போது தமிழ்நாடு முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். பாட்டாளி மக்கள் கட்சியினர் நேற்றுத் தென் ஆர்க்காடு தாள நல்லூர் புகையிரத நிலையத்தில் அதன் அதிகாரியைக் கத்தியால் வெட்டியதையும், அவர் சிகிச்சை பெற்று வருவதையும் திருமதி பொன்னம்மாள் சுட்டிக்காட்டினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் அதிகாரி கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணமாம்

(கொழும்பு)

கிறிங்காவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஏ தியோபிலஸ் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் மோசடி விசாரணைப் பிரிவின் இரண்டாவது உயரதிகாரியான இவர் நேற்று முன்தினம் மாலை யூனியன் பிளேசில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் காரில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது மோட்டார் சைககிள் ஒன்றில் இவரைப் பின்தொடர்ந்த இனம் தெரியாத இளைஞர்கள் இவர் காரிலிருந்து இறங்க முற்பட்ட போது மிக அண்மையாக நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதனால் இவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவருடன் கூடச்சென்ற இவரது மகளுக்கும் கார்ச் சாரதிக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன.

பொலிஸ் அதிகாரி ஏ. தியோபிலஸ் கிழக்குப் பிராந்திய

(6 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில் கைதானபோது

## சயனைட் உட்கொண்டு இளைஞர் ஒருவர் மரணம்

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் அதிகாரி ஏ தியோபிலஸ் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கொழும்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் சயனைட் உட்கொண்டு மரணமானார் என பொலிசார் தெரிவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. நா. இனப்பிரச்சினையில் தலையிடும் என நான் எண்ணவில்லை

### - சிறிலங்கா பிரதமர்

(கொழும்பு)

இனப்பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடும் என தான் எண்ணவில்லையென சிறிலங்கா பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான உதவிகளை நிறுத்தக்கோரி பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகட்கு யாழ். பிரசைகள் குழு மகஜர் அனுப்பியது பற்றி அரசுக்கு எதுவும் தெரியாது என பிரதமர் டி.பி. விஜயதுங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை என்பதால் ஐக்கிய நாடுகள் சபையோ வேறு எந்த சர்வதேச அமைப்புமோ அதில் தலையீடு செய்யுமென நான் எண்ணவில்லை, எதிர்பார்க்கவும் இல்லை, வெறுமனே பத்திரிகைகளில் வரும் செய்திகளை வைத்துக் கொண்டு நாம் நடவடிக்கை எடுக்க முடியாது.

மேலும் யாழ் பிரசைகள் குழுவிடம் இருந்து ஜனாதிபதிக்கு எந்தவொரு மகஜரும் வரவில்லை எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

## சிறிலங்கா ஜனாதிபதி நேபாளம் சென்றார்

(இஸ்லாமாபாத்)

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இஸ்லாமாபாத்தில் தனது இரண்டு நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று நேபாளம் சென்றிருக்கிறார்.

டிசம்பரில் பங்களாதேசில் நடைபெறும் சார்க் உயர் நிலை மாநாடு தொடர்பாக அவர் நேபாளத்தில் பேச்சு வார்த்தை நடாத்துவார். ஜனாதிபதி அடுத்த இரு வாரங்களில் இந்தியா, பங்களாதேஷ் உட்பட ஏனைய உறுப்பு நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவாக இன்றைய சிரமதான பணிகள்

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாவது ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம் பெற்றுவரும் சிரமதானப் பணிகளில் இன்றைய பணிகளாக;

கொடிகாமம் வட்டப்பிரிவில் அப்பகுதி மக்களால் மாவீரர் மண்டபம், நூல்நிலையம் என்பன துப்புரவு செய்யப்படவுள்ளன.

கைதடி வட்டப்பிரிவில் அப்பகுதி மக்களால் மறவன் புலோ றெனோ வீதி திருத்தம், கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை துப்புரவு செய்தல் கைதடி வடக்கு ஜான் பாலர் பாடசாலை துப்புரவு செய்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

## வீடியோ கடையில் திருட்டு

(குருநகர்)

யாழ்- நாச்சிமார் கோயிலடியில் நேற்று முன்தினம் இரவு வீடியோ கடை உடைக்கப்பட்டு கடையில் இருந்தலட்சக் கணக்கான ரூபா பெறுமதியான சாதனங்கள் திருடப்பட்டுள்ளன.

முன்கதவுக்குப் போடப்பட்டிருந்த பாரிய இரும்புச்சட்டம் பூட்டுகளை உடைத்து வளைக்கப்பட்டிருந்தது. கதவில் இணைக்கப்பட்டிருந்த உட்புறப் பூட்டும் பெயர்க்கப்பட்டிருந்தது.

யாழ் - காவல் துறைக்கு கடை உரிமையாளர் செய்துள்ள முறைப்பாட்டைத் தொடர்ந்து காவல் துறையினர் புலன் விசாரணைகளைத் தொடர்கின்றனர். [21]

மாதகலுக்கு சென்ற

## செஞ்சிலுவைக் குழு யாழ். நகர் திரும்பியது

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையைச் சேர்ந்த குழுவினர் மாதகல், இளவாலை பகுதிகளில் இராணுவப் பிடிக்குள் சிக்கியுள்ள 500 ற்கு மேற்பட்ட பொது மக்களைப் பார்வையிட்ட பின் நேற்று இரவு யாழ் நகர் திரும்பினர்.

நேற்று முன்தினம் மேற்படி சங்கத்தின் மூன்று பேர் அடங்கிய குழுவினர் பொதுமக்களைச் சந்திக்கச் சென்றது தெரிந்ததே இவர்கள் இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி, மாதகல் அந்தோனியார் ஆலயம் ஆகியவற்றில் சிறிலங்கா இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து உரையாடியதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன .(ச, க)

## அடையாள அட்டைகள் நேரில் வழங்கப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

இரண்டாயிரத்து நூறு அடையாள அட்டைகள் யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுள் பாடசாலை மாணவர்களுக்கான 203 அடையாள அட்டைகளும், புதிய, அவசர, சாதாரண விண்ணப்பங்களுக்கான 1334 அடையாள அட்டைகளும், இணை படிவங்களுக்கான (தொலைந்த திருத்தம் செய்தல்) 264 அடையாள அட்டைகளும், 1972, 73 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டவற்றுக்குப் பதிலாகப் புதுப்பித்து வழங்கப்படும் 290 அடையாள அட்டைகளும் அடங்குகின்றன.

இவ்வடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காக எவரும் ஆட்பதிவுச் செய

யாழ். செயலகத்தில்

[6ஆம் பக்கம் பார்க்க]

யளவிலான பதாகைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

நினைவு நாளின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டிருந்த திலீபன் நினைவுப் பந்தல்களை விட வேறும் பல இடங்களில் மேலதிக நினைவுப்பந்தல்கள் அமைக்கப்பட்டு திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

அஞ்சலி செலுத்துவதையும் நள்ளிரவு வேளைகளிலும் அவதானிக்க முடிந்தது.

நாளைய எழுச்சி நாளையொட்டி யாழ்- நகரப் பகுதியில் நேற்று நினைவு ஊர்திகள் பவனியாக பிரதான வீதிகள் வழியாக எடுத்துச் செல்லப்பட்டன.

அத்துடன் தமிழீழத்தின்

[6ஆம் பக்கம் பார்க்க[

# யாழ். குடாநாடு முழுவதும் திலீபன் நினைவு நிகழ்வுகள்

தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலும் பல எழுச்சி பூர்வமான நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன.

குருநகர் தொடர்மாடி முன்பாக சென்லூட்ஸ் கழகத்தைச் சேர்ந்த ஏழு இளைஞர்களும் நேற்று 48 மணி நேரத்தைக் கடந்து தொடர்ந்தும் உண்ணா நோன்பில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். பரியோவான் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்கள்நேற்று தமது பாடசாலை மைதானப்பகுதிகளை சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்தனர். இதில் மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் ஈடுபட்டிருந்தனர்.

பாஷையூர்புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது. கடற்புலிகள் பொறுப்பாளர் சங்கீதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல பொது மக்கள் கலந்து கொண்டனர்.

வடமராட்சிப் பகுதியில் கடந்த 22ஆம் திகதி உடுத்துறை மகாவித்தியாலய மாணவர்களும் மருதங்கேணி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களும் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். 23 ஆம் திகதி ஆழியவளை சீ. சீ. தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களும் 24ஆம் திகதி வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்களும் சிரமதானப் பணிகளை மேற் கொண்டனர்.

வடமராட்சி கிழக்கின் பிரதான வீதிகளான பருத்தித்துறை - மருதங்கேணி வீதி, மருதங்கேணி - குடாரப்புவீதி ஆகியன சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்கில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்கள் தாம் தங்கியுள்ள நாகர் கோவில், செம்பியன்பற்று பகுதிகளில் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றனர். கடந்த ஞாயிறு மருதங்கேணி வர்த்தகர்கள் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவுவிழா மாணவர் அமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

லெப் கேணல் தற்கொடையாளி திலீபனின் 5-ம் ஆண்டு நினைவு விழாவினை மிகப் பெரியளவில் இன்று யாழ். கல்விக்கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடாத்தவுள்ளது.

யாழ். இந்து மகளிர்கல்லூரியில் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இவ் விழாவிற்கு யாழ். கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. வேலாயுதம் பிரதம விருந்தினராகவும், விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவுத் தளபதி செல்வி ஜனா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர்.

இவ்விழாவில் நினைவுரையைத் தொடர்ந்து மாணவர் அமைப்பின் கவியரங்கம், ''எதிர் நீச்சல்'' நாட்டிய நாடகம், ''தியாகத்தின் சிகரம்'' வில்லுப்பாட்டு, அபிநயம் மற்றும் மாணவர் அமைப்பின் இசை கானங்களும் இடம்பெறவுள்ளன.

இவ்விழாவில் அனைத்துத் தமிழீழ மக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். கல்விக்கோட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச)

## விவசாய உபகரணங்கள் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து விவசாயிகளுக்கான விவசாய உபகரணங்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கையை கமநல சேவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. அடுத்தவாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் ''குமாரி'' என்ற கப்பலில் விவசாய உபகரணங்களின் தொகுதி ஒன்றும் எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## விதை உருளைக்கிழங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான பெரும் போக விவசாய முயற்சியாக நெற் செய்கையுடன் உருளைக் கிழங்குச் செய்கையும் மேற்கொள்ளப்பட உள்ளது.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாண்டுக்கான மேற்படி விவசாய முயற்சிக்கு தேவையான விதை உருளைக்கிழங்கைத் தருவிப்பதற்கு விவசாய சேவைகள் திணைக்களமும் யாழ். செயலகமும் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### 'பரிசு'

உங்கள் அபிமான மில்க்வைற் நீல சோப் மேலுறைகள் பெறுமதியான அன்பளிப்புகளைப் பெற்றுத் தருகின்றன. 25 மேலுறைகளைச் சேர்ப்பித்து ஒரு அப்பியாசக் கொப்பியை அன்பளிப்பாகப் பெறுங்கள். 100 மேலுறைகளுக்கு ஒரு உள்ளூர் உற்பத்தி லேஞ்சி. 500 மேலுறைகளுக்கு உள்ளூர்த்தயாரிப்புத் துவாய். மில்க்வைற் (சி/5103)

### நீமியா உரம்

நீமியா உரம் பாவனையால் நைதரசன் விரயம் தடுக்கப்படுகிறது. அடிக்கட்டு உரம் கரைந்தோ நீராவியாகவோ விரயமாவதில்லை. விளைச்சல் அதிகரிக்கிறது. கிலோ பக்கற் ஒன்று ரூ. 15/- மட்டுமே. 20 கிலோ பக்கற் விலை ரூ.260/- அண்ணாகோப்பி கடைகளிலும் கிடைக்கிறது மில்க்வைற் (சி/5101)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5044)

### உடன் விற்பனைக்கு உண்டு

வெள்ளை சிவப்பு சேவல் குஞ்சுகள் விலை ரூபா 20/- உடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகளுக்கும், புறொயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு:- இல 01, மத்திய சந்தை மானிப்பாய் (3272)

### வெளிவந்துவிட்டது

'கோப்பாய் - சிவம்' எழுதிய புதிய சிறுவர் பாடல்கள் "ரோஜாப் பூ" மற்றும் பூந்தோட்டம், நொடியும் விடையும், பொறுக்கிய முத்துக்கள் ஆகிய நூல்கள் எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். (3199


### ஓய்வூதியர்கள் கூட்டம்

ஓய்வூதியக்காரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று அடுத்தமாதம் எட்டாம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இலங்கை ஓய்வூதியக் காரர்களின் சங்கங்களின் சம்மேளனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. ஓய்வூதியக் கொடுப் பனவுகள் கணிப்பிடுவதில் உள்ள சீரின்மைகள் ஓய்வூதியம் அதிகரிக்கபடாமை ஆகிய பிரச்சினைகள் குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக தெரியவருகிறது.

## தியாகி திலீபன் 5 ஆவது எழுச்சி ஆண்டு

உன் சிந்தை, செயல், பேச்சால்
நீ சீரிய தொண்டுகள் செய்தாய்
கலை மூலம் வாழ்வைக் கண்ட
கற்றறிவில் வாழ்ந்தவனே
அனைவரும் போற்ற நின்ற
ஆவேசத் தியாகி திலீபா!
வண்ணத் தமிழ் ஈழமண்ணை
வளர்த்து எடுத்தவனே
புலிகளின் போரில் வெற்றியை
போதித்த குருவுமானாய்
ஈழத்தமிழ் மண்ணை மீட்க
ஈய்ந்தனை தேசப்பற்றை
உன் ஆழம் நிறைந்த தியாகத்தால்
ஒப்பில்லாது உயர்ந்தனையே!

யாழ். மாவட்ட
இறைச்சிக்கடை உரிமையாளர்
சமாசம்

அறிவிப்பு:
தியாகி திலீபனின் 5 ஆவது எழுச்சிநாள் நினைவுகளில் அனைத்து இறைச்சிக்கடை உரிமையாளர்களும் தவறாது (26-09-92) நல்லூர் கோயில் முன்றலுக்கு வந்து கலந்து கொள்ளவும்.

செயலாளர்
க. சி. கிருஷ்ணன்

(சி-5114)


## தேவை

★ ஓவியங்கள் வரைபவர்கள், விளம்பரப் பலகை எழுதுபவர்கள்.
★ தமிழ் தட்டச்சாளர்கள் ( Typist ).

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
முடிவு திகதி: 30-09.92

விளம்பர. இல. 169,
மே/பா. ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
(3273)


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 25 – 08 – 1973



தாயக மண்ணில் 25 – 09 – 1990

### வீரவேங்கை தவக்குமார்

[சிவசுப்பிரமணியம் ஜனார்த்தனன்]

ஆண்டிரண்டு ஆகிவிட்ட தன்பு கூர்ந்த ஜனார்த்தனா!
ஆனாலும் ஆறவில்லை எங்கள் துயரம்.
பண்புடன் நடந்து பாசத்துடன் பழகி
மண்ணுக்காக மரித்த வீரமறவா - உமக்கு
கண்ணீரால் அஞ்சலிகள்!!!

இவருடன் மரணித்த சகபோராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

ஜனார்த்தன் வீதி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை.

- குடும்பத்தினர்.
(3268)

# நினைவஞ்சலி



## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 09 - 25

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை 10-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு பட்டிருப்பு எல்லைக் கிராமத்தில் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட பெண்கள் உட்பட மூன்று விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த 8 தமிழர்கள்

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -
**காண்டீபன்**

கோடாலிக்கல் பகுதியில் இந்தியப் படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -
**யஸ்ரின்** (ஆறுமுகம் புலேந்திரன் - முள்ளியவளை, முல்லைத்தீவு)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

யாழ். பண்டத்தரிப்புப் பகுதியில் இந்தியப் படையினரால சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.



உதடு கருகி... உடல்சுருங்கி உருக
சிதையில் எழுவதுபோல் சோகத் தீபெருக ...
கதை கதையாய்ப் பேசியெமை மகிழ்வித்த
காவியத் திலீபனது நாவெடித்துக் கிடந்ததம்மா

பாசமகன் இங்கே படுக்கையில் கிடக்க
பலாலியில் இந்தியக்குழு பேச்சினைத் தொடுக்க
தேசத்தின் சொத்தான பனைகளெல்லாம்
நேசமகன் நிலைகண்டு அழுததம்மா!

# செல்லத்துரை ரான்ஸ்போட்ஸ் சேவிஸ்

சோமசுந்தரப்புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(சி/5106)

# நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 25

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை 10-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு பட்டிருப்பு எல்லைக் கிராமத்தில் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட பெண்கள் உட்பட மூன்று விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த 8 தமிழர்கள்

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**காண்டீபன்**

கோடாலிக்கல் பகுதியில் இந்தியப் படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய -

**யஸ்ரின்** (ஆறுமுகம் புலேந்திரன் - முள்ளியவளை, முல்லைத்தீவு)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்

யாழ். பண்டத்தரிப்புப் பகுதியில் இந்தியப் படையினரால சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு வவுனியா - பாவற்குளம், 1-ம் படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**தவக்குமார் / ஜெனா** (சிவசுப்பிரமணியம் ஜெனார்த்தனன் - ஏழாலை கிழக்கு, யாழ்ப்பாணம்)

**கோபிநாத்** (வேலாயுதம் ரவி - வாரிக்குட்டியூர், பாவற்குளம், வவுனியா)

**பரதன் / வரதன்** (கந்தசாமி உதயசங்கர் - இல 10, 2-ம் படிவம், சேமமடுக்குளம், சேமமடு, வவுனியா)

அம்பாறை - அக்கரைப்பற்று, தம்பிலுவில், திருக்கோவில் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பின்னர் தலைகள் துண்டிக்கப்பட்டு சாக்கில் கட்டப்பட்ட நிலையில் தமிழீழக் கடற்பரப்பில் (40-ம் கட்டை) கிடந்த 10 தமிழர்கள்.

மட்டக்களப்பில் தேசவிரோத சக்திகளினால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன தச்சுத் தொழிலாளிகளான நாவற்குடா ஒடக்கரை வீதியைச் சேர்ந்த இளைஞன், நொச்சிமுனை மாதர் வீதி வாசி ஆகிய 2 தமிழர்கள் - சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த இளைஞன், செங்கலடியைச் சேர்ந்த மாணவன்.

1991 ஆம் ஆண்டு திருக்கோணமலை முதலிக்குளம் சிறிலங்கா விமானப் படைத் தளத்தில் விமானப்படையினர் மீது பதுங்கியிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**மேஜர் ஜீவா / அன்சார்** (சின்னத்தம்பி தியாகராசா - கந்தளாய், திருக்கோணமலை)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**சீலன் / குணசீலன்** (இராசு சிறிக்குமார் - கனகராயன் குளம் வவுனியா)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**சின்னமருது** (தேவராசா சிவகுமார் - யோகபுரம், உரும்பராய் கிழக்கு, யாழ்)

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடிக்கும், களுதாவளைக்கும் இடைப்பட்ட பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5105)




பன்குளம்,

அழகான தமிழ்க் கிராமம் முக்காலமும் நீர் நிறைந்து நிற்கும் குளம். குளத்திற்கு கீழாக பரந்து விரியும் வயல் நிலங்கள். வறுமைக்கு அங்கு என்ன வேலை.

தமிழர் பகுதியானபன்குளத்திலும் சிங்களக் குடிகள் பரவத் தொடங்கின. காணி இல்லாத சிங்களவர்களுக்கு நிலம் வழங்க தமிழர் கிராமமான பன்குளத்திற்குள் சிங்கள அரசு இடங் கண்டுபிடித்தது.

தமிழர்களுக்கு நடுவில் சிங்களவர்களும் அங்கு குடியிருத்தப்பட்டார்கள்.

பன்குளத்தில் நடுத்தர வசதி வாய்ப்புகளை கொண்ட குடும்பமொன்றைச் சேர்ந்தவள் தான் ஜஸ்மின். அப்பா, அம்மா, அக்கா, அண்ணா, தம்பி என்ற சிறியவட்டத்தினுள் அவளும் ஒரு சிறுமி.

வீடு, அழகான கிராமத்தின் வீதிகள், வயல்கள் எங்கள் சொந்த ஊரில் நாங்கள் வாழ்கின்றோம். இந்த வாழ்வு நிரந்தரமானது என்று தான் அங்கு எல்லோரும் நினைத்தார்கள்

ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தி ஏழு இலங்கை முழுமைக்குமான தேர்தல் முடிவுற்று ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரச கட்டில் ஏறி இருந்தது. தமிழர்கள் தங்கள் தேசம் சிறிலங்காவிலிருந்து விலகிச் செல்வதற்காக வாக்களித்திருந்தார்கள்.

தமிழர்களின்ஒன்றிணைவைக் கண்ட சிங்கள ஆட்சியாளர்கள் சினம் கொண்டார்கள்

நள்ளிரவு பன்குளம் கிராமம் தீப்பற்றி எரிந்தது நெருப்பினூடே சிங்களக் காடையர்கள் தமிழர்கள் மீது பாய்ந்தனர். அப்போதெல்லாம் ஜஸ்மினுக்குநான்குவயது தான் நிறைந்திருந்தது.

கிராமம் தீப்பற்றி எரிந்ததும் அவளை அணைத்தபடி வயல்களிலும், காடுகளிலும் எங்கும் சாம்பல் மேடுகள். பலரை அந்த மண் பறிகொடுத்திருந்தது

ஜஸ்மின் சிறுமி அவளுக்கு எதுவும் விளங்கவில்லை ஆனால் சிங்களவர்கள் சிங்கள அரசின் காவலர்கள் என்றால் வெறுப்பும், கோபமும் அந்தச் சின்ன வயதிலேயே மனதிற்குள் குடிகொண்டு விட்டது,

எண்பத்தி ஆறு இப்போது ஜஸ்மினுக்கு பதின் மூன்று வயது. பன்குளத்தில் சிங்களவரின் தொகை பெருகி இருந்தது தமிழரின் நிலங்களும், வயல்களும் அடாத்தாக பறிக்கப்பட்டிருந்தன அவை இப்போ சிங்களவருக்கு சொந்தமாக இருந்தன.

இம்முறை தமிழர்கள் மீது சிங்களவர் பாய்ந்து ஓய்ந்த பொழுது ஜஸ்மின் நிலைமைகளை ஓரளவு புரிந்து கொண்டாள்,

சிந்தப்படும் இரத்தத்தினதும் கண்ணீரினதும் பெறுமதி அவளுக்கு நன்றாகவே விளங்கியது. அந்த மண்ணில் தமிழர்களின் வாழ்வு நிச்சயமற்றதொன்றாகிப் போனது. சிங்களவர் சினங்கொள்ளும் போதெல்லாம் தமிழர்கள் அழிந்தனர்.

இதற்கு இடையில் ஜஸ்மினின் அண்ணன் புலிகளுடன் இணைந்து கொண்டான் அண்ணனை சிலநிமிடங்கள் காணாது விட்டாலும் தவிக்கும் அம்மா அந்தச் செய்தியை கேட்ட பின்பும் அமைதியாக இருந்தாள் சொல்லப் போனால் அவன் சென்றதை அவளும் விரும்பினாள்.

அவர்கள் வாழ்வதாக இருந்தால் போராட வேண்டும் அல்லது அழிந்து போக வேண்டி வரும் என்பதை அம்மா அனுபவத்தில் தெரிந்திருந்தாள்

அழிவுகள் அடாவடித்தனங்கள்இறுதியாக பன்குளத்திலிருந்து தமிழ் மக்கள்ஒரேயடியாக விரட்டப்பட்டனர்:

ஜஸ்மின் குடும்பத்தினருடன்

அடாவடித்தனங்களையும் காலத்திற்குக் காலம் அனுபவித்த அவளுக்குள்-கடினமான போராட்ட வாழ்க்கையை இலகுவாக எடுக்கும் மனவுறுதி குடிகொண்டு விட்டது. அதனால்தான் முகாமிலும் சண்டைகளின் போதும் அவளால் சிரித்துக் கொண்டு உலவ முடிந்தது.

ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கையை புலிகள் தொடங்கிய போது அதில் ஜஸ்மினும் ஒருத்தியாகக் கலந்து கொண்டாள்.

வெவ்வேறு முனைகளால் ஆனையிறவு தளம் மீதான தாக்குதல்கள் ஆரம்பமாகின. தேவைப்படும் போதெல்லாம் ஜஸ்மினின் துப்பாக்கியும் எதிரிகளை அகற்றப் போராடியது.

அதே நேரம் திருக்கோணமலை காட்டுப் பகுதிக்குள் நடந்துகொண்டிருந்த புலிகளின் ஒரு அணி மீது இராணுவத்தினர் பதுங்கி இருந்து தாக்கினார்கள்.

ஜஸ்மினின்அண்ணன்சபேசன் அதில் காயமடைந்திருந்தான். சில நாட்களின் பின்பு யாழ். மாவட்டத்தில் ஓர் வைத்திய சாலையில் அவன் சேர்க்கப் பட்டிருந்தான். அவனைப் பார்ப்பதற்காக வன்னிப் பகுதியில் எதோ ஓர் அகதிமுகாமில் தங்கி இருந்த அம்மா வந்திருந்தாள்.

மகனைப் பார்த்த பின் மகளைப் பார்க்க அவள் விரும்பினாள். சண்டை கடுமையாக நடந்து கொண்டிருந்தது. தாய் நிலத்தை காக்கும் போரிலிருந்து சிறு பொழுதென்றாலும் விலகிவர ஜஸ்மினால் முடியவில்லை.



வீரவேங்கை

ஜஸ்மின்


# "பறையை வேறு நிகழ்ச்சிகளுக்கும் உபயோகிக்கலாம், ஆனால் அதன் மகிமை உணரப்படவில்லை"

★ உங்களால் எப்படி ஒரு பறைமேள இசைக் கலைஞராக முடிந்தது.?

பரம்பரையான பறைமேள இசைக் கலைச் சந்ததியில் நான் ஐந்தாவதுதலைமுறை. என் தந்தை இரத்தினமும் ஒரு மேளகாரர். எங்கள்பரம்பரையில் எனக்கு முன்வேலன், முருகன், ஆறுமுகத்தான்,கதிரன் என்று நான்கு தலைமுறையினர் எல்லோருமே பறைமேளம் அடிப்பதையே தொழிலாகச் செய்து வந்தார்கள். பறைமேளம் பழக எனக்குத் தூண்டுகோலாய் அமைந்தது எனது வீட்டுச் சூழ்நிலை தான்.

★ மற்றத் தோல் கருவிகளைப் போல் பறை மேளக் கலை பொலிவுடன்விளங்குவதற்குப் பயிற்சி அவசியமா?

பதினைந்து வயதில் இந்தக் கலையைப் பழகத் தொடங்கிய எனக்கு இப்போது ஐம்பது வருட அனுபவம். ஆரம்ப நிலையில் சாதாரண வீட்டுச் சூழலில் பெற்ற அனுபவத்துடன் சல்லாரி போடுவதுடன் பயிற்சி ஆரம்பமாகியது. தொடர்ந்து தவறில்லாது சல்லாரி போடும் வரை இந்தப் பயிற்சி. அடுத்த கட்டத்தில் தம்பட்டம். தம்பட்டத்துக்கும் மேளத்துக்கும் உள்ள லயஒற்றுமையை அறிந்து கொண்டதும் மூன்றாவது கட்டத்தில் மேளம் வாசிப்போம். பொதுப்படையாக மேலே சொல்லப் பட்ட மூன்று திறன்களில் தம்பட்டமும் மேளமும் முக்கியமானவை. இரண்டும் ஒட்டிப் பிறவாத இரட்டையர் போல இரண்டிலும் போதிய பயிற்சி இல்லாமல் இதைச் செய்ய முடியாது. மேளம் கொட்டுவதற்குப் பயிற்சி தான் அவசியம் பயிற்சி இல்லாமல் வன்னிதமாகத் (நுணுக்கம்) தொழில் செய்ய முடியாது. கைகள் இரண்டிலும் ஒவ்வொரு கம்புகள் கம்புகளால்தான் தட்டுகிறோம். எனது தகப்பன்



எனது மேள இசை இடம் பெறுவது வழக்கம். அண்மையில் மஞ்சவனப்பதியில் சுவாமி தேரில் ஏறித் தேர் ஓடும் வீதியில் வந்து இருப்பிடத்துக்குத் திரும்பும்வரை நான் வாசிக்கவேண்டியிருந்தது. இது உண்மையில் சமூகம் சார்ந்த ஒரு சமையப் பணியாகவே நான் கருதுகிறேன். எனது தகப்பனார் காலத்தில் கோவில்களில் மிகவும் கட்டுப்பாடான பின்னணிகள் இருந்தன. இப்போது அப்படியெல்லாம் கோவில்களில் இல்லை என்னுடைய சமுதாயப் பணி கோவில்களில் மேளம் அடிப்பது மட்டுமல்ல ஊரிலுள்ள சாவீடுகளிலும் சம்பந்தப்படுகிறேன். இதில் ஒரு சமுதாய உணர்

என்பதை நிராகரித்து விட முடியுமா?

யாழ் குடா நாட்டின் சமுதாய மரபில் இந்தக் கலையைத் தொழிலாகக் கொண்ட பல குழுக்களும் இயங்குகின்றன. பணம் தேடும் மரபை முற்றிலுமாக நிராகரித்து விட்டு எந்த ஒரு கலையும் வெற்றி பெறுவற்கான சாத்தியப்பாடு இங்கு இல்லை.

வயிற்றைக் கழுவ உழைக்க வேண்டி உள்ளது. அப்போது நான் வண்ணார் பண்ணைப் பிரசித்தகாரர். ஆறுகால் மடம் பூநாரிமரத்தடி, அரசடி, ஸ்டேஷன், பெரியகடைஆகிய பகுதிகளில் பிரசித்தம் செய்வதற்கு எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆகக்கூடியது ஒரு நாளைக்கு இரண்டு வட்டாரங்கள் பிரசித்தம் செய்யலாம் நாளொன்றுக்கு ஐந்து ரூபா சம்பளம்; அவ்வளவுதான் சாவீட்டில் அடித்தாலும் பணம் தருவார்கள் இப்போதெல்லாம் சாவீட்டிற்கு அடித்தால்தலா 250ரூபா கூலி.

அத்துடன் கிராமங்கள் தோறும் பல்வேறு தளங்களில் மேளம் அடிக்கும் குழுக்கள் இயங்குவதால் உழைப்பு மிகக் குறைவுதான். சாவீட்டிற்கு மேளம் அடிப்பதை மாத்திரம் தொழில்சார்ந்த அமைப்பாக மாற்றி பதினைந்து கூட்டங்கள் வரை வைத்திருப்பவர்களும் எமக்குப்

> யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் வசிக்கும் கதிரன் இரத்தினம் (வயது 65) கடந்த ஐம்பது வருடங்களாகப் பறை கொட்டும் பணியாற்றுகிறார். பயிற்சியினாலும் அனுபவத்தினாலும் அதீத கலைத் தன்மையைப் பறையில் அலட்சியமாக வெளிப்படுத்துகிறார். அண்மைக்காலம் வரை பிரசித்தகாரராகவும் ஈடுபட்டிருந்தார். தமிழ் எட்டாம் தரம் வரை படித்திருக்கிறார். மரபு வழியாக வரும் இந்தக் கலை மறைந்து கொண்டு வரும் கலை என்கிறார். அருகி வரும் இந்தக் கலையில் ஆராய்ச்சி மேற்கொண்டு அதை வளர்ப்பது தமிழ்ச் சமுதாயத்தின் கடமை.

தான் நாம் ஈடுபடுகிறோம், பயிற்சி மூலம் நாம் பெற்ற அனுபவத்தைக் கொண்டுகண்ணால் பார்த்து, மனதால் உணர்ந்து சுவை பயக்கும் வகையில் மேளத்தைக் கொட்டுகிறோம், மனத்தின் அடித்தளத்தில் உருவாகும் வல்லபங்கள் யாவும் இரண்டு கைகளிலுமிருக்கும் பிரம்புகளில் தான் தங்கியிருக்கும் சாஸ்திரீகக் கலைகள் போல் தாளம் எதுவுமில்லை நாம் தாளம் சொல்லி அடிப்பதுமில்லை. அப்படி ஒருவருக்கும் தெரியாது. வன்னிதமாக (நுணுக்கம்) அடிப்பதென்றால் கைக்குள் இருக்கும் தடியை உருட்டத் தெரியாதவன் அடிக்க மாட்டான். அப்படித்தான் தம்பட்டமும் எமது கலையில் மூன்று அமிசங்கள் முக்கியம். தொடக்கத்தில் ஒரு தீர்மானம் இதனைத்திரும்பவும் திரும்பவும் கூடுதலாக முழக்கலாம் மூன்றாந்தரம் தீர்க்கும் போது கூடுதலாக இருக்கும். கூடுதலாக அல்லது கடுமையாக இருப்பதை இரண்டு கூட்டங்கள் மாறிமாறிவாசிக்கலாம். இந்த மூன்று நிலைகளும் ஜனரஞ்சகமாக இருந்தாலும் தாள வகைகள் பட்டியலில் எதுவும் சேர்க்கப்படவில்லை.

**பேட்டி :மதன்**

★ நீங்கள் செய்து கொண்டிருக்கும் கலையின் எதிர்காலம் பற்றிஎன்ன நினைக்கிறீர்கள்?

அப்போது என்னிடம் கூட்டம் இருந்தது இப்போது தம்பட்டமடிக்க ஒரு ஆளைக் கொண்டு போவேன். எல்லோரும் கேட்கும் இடத்துக்கும் இப்போது போவதில்லை. அக்கம் பக்கத்து ஊர்களில் சாவீடுகளிலும், கோவில்களிலும் தட்டினால்போதுமென்றிருக்கிறேன. பல கிராமங்களில் இந்தத் தொழிலை இப்பொழுது கைவிட்டுவிட்டார்கள். கொக்குவில், சங்குவேலி, பண்டத்தரிப்பு, கந்தரோடை,

அங்கு எல்லோரும் நினைத்தார்கள்

ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்தி ஏழு இலங்கை முழுமைக்குமான தேர்தல் முடிவுற்று ஜெயவர்த்தனாவின் ஐக்கிய தேசியக் கட்சி அரச கட்டில் ஏறி இருந்தது. தமிழர்கள் தங்கள் தேசம் சிறிலங்காவிலிருந்து விலகிச் செல்வதற்காக வாக்களித்திருந்தார்கள்.

தமிழர்களின்ஒன்றிணைவைக் கண்ட சிங்கள ஆட்சியாளர்கள் சினம் கொண்டார்கள்

நள்ளிரவு பன்குளம் கிராமம் தீப்பற்றி எரிந்தது நெருப்பினூடே சிங்களக் காடையர்கள் தமிழர்கள் மீது பாய்ந்தனர். அப்போதெல்லாம் ஜஸ்மினுக்குநான்குவயது தான் நிறைந்திருந்தது.

கிராமம் தீப்பற்றி எரிந்ததும் அவளை அணைத்தபடி வயல்களிலும், காடுகளிலும் அம்மா ஓடியதும் அவளுக்கு சிலகாலம் நினைவலைகளில் நின்றன பின்பு மறந்து போனாள்,

எண்பத்தி மூன்று, அப்போது ஜஸ்மினுக்கு பத்து வயது தநதையை இழந்த பின் அவர்கள் நால்வரையும் வளர்க்க அம்மா போராடிக் கொண்டிருந்த காலம்.

அன்றும் அப்படித்தான் இரவு வானொலிச் செய்தியைத் தொடர்ந்து பன்குளம் சந்தியின் மத்தியில் தமிழர் கடைகளில் தீ எழுந்தது.

சிங்களக் காடையர்களின் வெறிக்கூச்சல்கள் தமிழ்மக்களின் அவலக் குரல்கள்— — பன்குளம் கிராமத்தில் படர்ந்தது. இளைஞர்களில் சிலர் எதிர்த்தனர்.

ஆனால் காடையரின் துணைக்கு அரசகாவலர்களும், தமிழர்களின் இரத்தம் எங்கும் சிந்தியது.

அம்மா ஜஸ்மினையும் இழுத்துக் கொண்டு காட்டிற்குள் ஓடினாள் பசியும் பட்டினியும் நாட்கள் கடந்தன மீண்டும் கிராமத்திற்கு வந்த போது களவர் சினங்கொள்ளும் போதெல்லாம் தமிழர்கள் அழிந்தனர்.

இதற்கு இடையில் ஜஸ்மினின் அண்ணன் புலிகளுடன் இணைந்து கொண்டான் அண்ணனை சிலநிமிடங்கள் காணாது விட்டாலும் தவிக்கும் அம்மா அந்தச் செய்தியை கேட்ட பின்பும் அமைதியாக இருந்தாள் சொல்லப் போனால் அவன் சென்றதை அவளும் விரும்பினாள்.

அவர்கள் வாழ்வதாக இருந்தால் போராட வேண்டும் அல்லது அழிந்து போக வேண்டி வரும் என்பதை அம்மா அனுபவத்தில் தெரிந்திருந்தாள்

அழிவுகள் அடாவடித்தனங்கள்இறுதியாக பன்குளத்திலிருந்து தமிழ் மக்கள்ஒரேயடியாக விரட்டப்பட்டனர்:

ஜஸ்மின் குடும்பத்தினருடன் ஆலங்கேணி கிராமத்தில் தங்கி இருந்தாள்:

1990 இந்தியப் படை வெளியேறி சில நாட்கள் கடந்திருந்தன:

சிங்கள அரசு பேச்சுவார்த்தை என்று நாடகமாடிக் கெண்டிருந்தது. தமிழர்களின் சுதந்திர வாழ்வுக்கு தாயகத்தின் விடுதலை அவசியமானது என்பதை ஜஸ்மின் உணர்ந்து கொண்டாள். அவளும், அவளின் தோழிகளில் சிலரும் கிராமத்திலிருந்து புறப்பட்டார்கள்.

ஜஸ்மின் அவளின் கைகளில் தேசத்தை மீட்பதற்கான ஆயுதம். அவளும், அவளது கிராமத்தவர்களும் கண்டுவிட்டு ஓடிய 'அரச காவலர்களின் கைகளில் இருந்த ஆயுதம்' இன்று அவளின் கைகளிலும் இருந்தது.

களங்களில் அவள் வீரமுடன் போரிட்டாள். சண்டை நடைபெறும் ஒவ்வொரு களத்திற்கும் போக வேண்டும் என்று அவாவி நின்றாள். சிறுவயது தொடக்கம் சிங்களவர்களின் அட்டூழியங்களையும்



வீரவேங்கை

## ஜஸ்மின்

உணவற்ற, உறக்கமற்ற நிலையில் ரவை மழைக்குள் நின்று அவர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள் ஜஸ்மின் வழமைபோல் சிரித்தாள் மகிழ்ச்சியாக இருந்தாள் எதிரிகளைக் கண்ட போது மட்டும் ஆவேசத்துடன் போரிட்டாள்.

மகனைப் பார்த்துவிட்டு திரும்பிய தாய் அகதி முகாம் வாசலில் கால் வைத்த பொழுது அவளுக்கு துயரம் நிறைந்த அந்தச் செய்தி கிடைத்தது.

ஜஸ்மின் வீரச்சாவடைந்து விட்டாள் மகளின் இழப்பு அம்மாவின் இதயத்தை சோகமாக அழுத்தினாலும் ஜஸ்மினின் உன்னதமான வாழ்வை நினைத்து அவளால் அழ முடியவில்லை ஆனையிறவின் உப்புக் காற்று அவளின் வீரம் நிறைந்த வரலாற்றை என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் என்பது அம்மாவுக்கு நன்றாகவே தெரியும்

-தமிழன்

பயிற்சி ஆரம்பமாகியது.தொடர்ந்து தவறில்லாது சல்லாரி போடும் வரை இந்தப் பயிற்சி. அடுத்த கட்டத்தில் தம்பட்டம்.தம்பட்டத்துக்கும் மேளத்துக்கும் உள்ள லயஒற்றுமையை அறிந்து கொண்டதும் மூன்றாவது கட்டத்தில் மேளம் வாசிப்போம்.பொதுப் படையாக மேலே சொல்லப் பட்ட மூன்று திறன்களில் தம்பட்டமும் மேளமும் முக்கியமானவை. இரண்டும் ஒட்டிப் பிறவாத இரட்டையர் போல இரண்டிலும் போதிய பயிற்சி இல்லாமல் இதைச் செய்ய முடியாது.மேளம் கொட்டுவதற்குப் பயிற்சி தான் அவசியம் பயிற்சி இல்லாமல் வன்னிதமாகத் (நுணுக்கம்) தொழில் செய்ய முடியாது. கைகள் இரண்டிலும் ஒவ்வொரு கம்புகள் கம்புகளால்தான் தட்டுகிறோம். எனது தகப்பன் காலத்தில் ஒரு கையில் கம்பு மற்றக் கையினால் மேளம் தீர்த்தார்கள். இக்கலையில் எனக்குக் கிடைத்தவெற்றிக்கு சூழலும் கலை உணர்வும் பயிற்சியும் தான் காரணங்களென்று திட்டவட்டமாக நம்புகிறேன்.

★இந்தக்கலையின் சமுதாயப் பணியினைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஆரம்பத்தில் சமுதாயத்தோடு பறைமேள இசைக்கு உள்ள தொடர்பு காரணமாகச் சாவீடுகள், கோவில் திருவிழாக்கள் போன்ற சமூகச் சடங்குகளில் பறை மேளம் இசைக்கப்பட்டு வருகிறது. முக்கியமான வேலை அம்மன் கோவில்களில் சுவாமி வீதிக்கு வந்து திரும்பும் வரையும் தீக்குளிப்பன் போதும் அதற்குத் தகுந்த மாதிரி வாசிக்க வேண்டும் வண்ணார்பண்ணை வீரகாளி அம்மன் கோவில் வைகாசி விசாகத்தில் திருநெல்வேலிமுத்துமாரி அம்மன் கோவில் ஆகிய கோவில்களில் [...] ணிகள் இருந்தன. இப்போது அப்படியெல்லாம் கோவில்களில் இல்லை என்னுடைய சமுதாயப் பணி கோவில்களில் மேளம் அடிப்பது மட்டுமல்ல ஊரிலுள்ள சாவீடுகளிலும் சம்பந்தப்படுகிறேன். இதில் ஒரு சமுதாய உணர்வும் இருக்கிறது. சாவீட்டுக்குத் தட்டப் போனால் அவர்களுடைய சூழ்நிலை அவர்கள் எநத நிலையில் இருந்தால் என்ன, உரிமைக்காரப் பெண்கள் பந்தலில் வந்து நின்று மார்படித்து வரவேற்பார்கள் சில இடங்களில் கூடி நின்று அழுவார்கள் பிரேதத்தைச் சுற்றியும் அழுவார்கள் பிறகு இருப்பிடம் தருவார்கள்.இப்போதெல்லாம் காலம் மாறிப் போச்சு இருந்தாலும் சில கிராமங்களில் இந்தச் சம்பிரதாயம் இப்போதும் பேணப் படுகிறது. பெண்கள் சாவீட்டுக்கு வரும்போது மேளததில் அடித்துக் காட்டுவோம்.அந்த அடியில் வாற பெண்களை உரிமைக்காரர் வரவேற்று அழுவார்கள். ஆண்கள் வரும் போது அடித்துக் காண்பிக்கும் வழக்கம் இல்லை.

★இந்தக் கலையில் மற்றொரு பரிமாணமும் இருக்கிறது. குறிப்பாகத்தொழில் ரீதியான வருமானத்தை எதிர்பார்த்தும் மேளம் அடிக்கும் தொழில் நடைபெறுகிறது அத்துடன் கிராமங்கள் தோறும் பல்வேறு தளங்களில் மேளம் அடிக்கும் குழுக்கள் இயங்குவதால் உழைப்பு மிகக் குறைவுதான். சாவீட்டிற்கு மேளம் அடிப்பதை மாத்திரம் தொழில்சார்ந்த அமைப்பாக மாற்றி பதினைந்து கூட்டங்கள் வரை வைத்திருப்பவர்களும் எமக்குப் பெரும் சவாலாக இருந்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் வசிக்கும் கதிரன் இரத்தினம் (வயது 65) கடந்த ஐம்பது வருடங்களாகப் பறை கொட்டும் பணியாற்றுகிறார். பயிற்சியினாலும் அனுபவத்தினாலும் அதீத கலைத் தன்மையைப் பறையில் அலட்சியமாக வெளிப்படுத்துகிறார். அண்மைக்காலம் வரை பிரசித்தகாரராகவும் ஈடுபட்டிருந்தார். தமிழ் எட்டாம் தரம் வரை படித்திருக்கிறார். மரபு வழியாக வரும் இந்தக் கலை மறைந்து கொண்டு வரும் கலை என்கிறார். அருகி வரும் இந்தக் கலையில் ஆராய்ச்சி மேற்கொண்டு அதை வளர்ப்பது தமிழ்ச் சமுதாயத்தின் கடமை.

பறை கொட்டும் கலையை வேறுநிகழ்ச்சிகளுக்கும்உபயோகிக்கலாம் ஆனால் பழக்கும் படி யாரும் கேட்பதில்லை. அதன்மகிமை உணரப்படவுமில்லை.

> "ஐந்து தலைமுறைகளாக இந்தக்கலைக்குப் பங்களிப்பு வழங்கி வரும் சல்லாரி என் கையில் இருக்கிறது. எனக்குப் பிறகு அதற்கு வேலையில்லை."

★ குறிப்பிட்ட உணர்வை, குறிப்பிட்டபுரிதலை வெளிப்படுத்த உதவும் தாளக் கட்டுக்களைப் பற்றி விளக்கம் தர முடியுமா?

உணர்ச்சி பூர்வமாகக் கூடுதலாக அல்லது கடுமையாக இருப்பதை இரண்டு கூட்டங்கள் மாறிமாறிவாசிக்கலாம். இந்த மூன்று நிலைகளும் ஜனரஞ்சகமாக இருந்தாலும் தாள வகைகள் பட்டியலில் எதுவும் சேர்க்கப்படவில்லை.

★ நீங்கள் செய்து கொண்டிருக்கும் கலையின் எதிர்காலம் பற்றிஎன்ன நினைக்கிறீர்கள்?

அப்போது என்னிடம் கூட்டம் இருந்தது இப்போது தம்பட்டமடிக்க ஒரு ஆளைக் கொண்டு போவேன். எல்லோரும் கேட்கும் இடத்துக்கும் இப்போது போவதில்லை. அக்கம் பக்கத்து ஊர்களில் சாவீடுகளிலும், கோவில்களிலும்தட்டினால்போதுமென்றிருக்கிறேன. பல கிராமங்களில் இந்தத் தொழிலை இப்பொழுது கைவிட்டுவிட்டார்கள். கொக்குவில், சங்குவேலி, பண்டத்தரிப்பு, கந்தரோடை, காரைநகர், தொல்புரம், சுழிபுரம், மருதனாமடம் ஆகிய ஊர்களில் எனது வயதை ஒட்டியவர்கள்ஒருவர் இருவர் இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். இந்தத் தொழில் எமது தலைமுறையின் பின் அருகிவிடும் போல் தெரிகிறது. எனக்குப்பின் எனது பெயரைச் சொல்லுமளவிற்கு எனது பிள்ளைகள்எனதுதொழிலைப் பழக விரும்புகிறார்களில்லை. தட்சணாமூர்த்திக்குப் பிறகு அவர் மகன் தவில் வாசிக்கிறார் என்றால் அந்தத் தொழிலுக்கு உள்ள மதிப்புத்தான் காரணம். மனிதனை மனிதனாக மதிக்காததினால் தான் இந்தக்கலைஅருகிப்போகிறது.

★இந்த மாதிரிச் சூழ்நிலையில் - இபபோது நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று சொல்லமுடியுமா?

(சற்றுத்தயங்கியபின்)ஐந்து தலைமுறைகளாக இந்தக் கலைக்குப் பங்களிப்பு வழங்கி வரும் சல்லாரி என்கையில் இருக்கிறது எனக்கும் பிறகு அதற்கு வேலையில்லை.

# பூமியின் வடக்கு-தெற்கு திசைகளை காந்த ஊசிகள் சரியாகக் காட்டுவதில்லை

பண்டைக்கால கடற்பிரயாணங்களில் திசையை அறிய பயன்படும் திசைஅறி கருவிகளில் காந்த ஊசிகள் பயன் பட்டு வந்தன. இக்காந்த ஊசிகள் ஏன் வடக்கு தெற்காக நிற்க வேண்டும்என்பதுபற்றிய ஆராய்ச்சிகள்முக்கியமானவையாக இருந்தன. உண்மையில் இந்த காந்த ஊசிகள் பூமியின் வட தென் திசைகளைசரியாக காட்டுவதில்லை என கடற்பிரயாணங்களில் பல முறை அனுபவபூர்வமாக உணரப் பட்டது.

அமெரிக்காவை கண்டுபிடித்த கொலம்பஸ் தனது முதலாவது கடற்பிரயாணத்தின் போது காந்த ஊசியானதுபூமியின் சரியான வடக்கு திசையைக்காண்பிக்க வில்லை என்பதைஅவதானித்தார்.ஆனால் அதனைக் கூறினால் தம்முடன் பயணம் செய்பவர்கள் பயந்து பயணத்தை கைவிட்டுவிடலாம்என நினைத்து அவர் இதனை எவரிடமும் கூறவில்லை.

இவ் அவதானிப்புகள் பூமியின் குறிப்பிட்ட இடத்தினை எடுத்துக்கொண்டால் கூட காந்த ஊசிகள் எப்போதும் சரியான வடக்கு தெற்கை காட்டவில்லை என்பதனை எடுத்துக்காட்டின. பூமியின் உண்மையான வடமுனைக்கும் காந்த ஊசிகள் காட்டும் வடமுனைக்கும் பெருமளவு வித்தியாசம் இருப்பதை அவதானிப்புகள் காட்டின. இவ்வித்தியாசத்தை அறிந்து கொள்வதற்கு ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று கிரேக்க நாட்டிலுள்ள மக்னீசியா(Magnesia) என்னும் நகரில்தான் முதன் முதலில் இயற்கையான காந்தக்கற்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனால் அதற்கு "மக்னெற்ஸ்" (Magnets) என பெயரிடப்பட்டன முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட காந்தக்கற்கள் இரும்பு ஒட்சைட்டினால் ஆனவையாகும். கி.மு. 550 ஆண்டளவில் தேல்ஸ் என்ற தத்துவஞானி தான்முதன்முதலில்காந்தக்கல் என்பதைப் பற்றி விவாதித்தார் என நம்பப்படுகிறது.

காந்தக்கற்கள் இரும்புப் பொருள்களை கவரும் தன்மை வாய்ந்தவை என்ற ரீதியில் அவை அறியப்பட்டபோதிலும் அவற்றின் மீது இரும்பு ஊசியொன்றை தடவும் போதுஅவ் ஊசிகளும் காந்தமாகும் என அறியப்பட்ட பின்பே காந்தத்தைப் பற்றிய ஆராய்ச்சி

**வேலவன்**

யில் விஞ்ஞானிகள் அக்கறை செலுத்தத் தொடங்கினர். அவ்வாறான ஆராய்ச்சியின் போது அவர்களின் முக்கிய கண்டுபிடிப்பாக அமைந்தது, காந்த ஊசிகளை சுயமாக தொங்கவிட்டால் அவை வடக்கு தெற்காக நிற்கும் என்பதாகும். இதன் மூலம் கடற்பிரயாணங்களில் திசையறி கருவியாக இவற்றை உபயோகிக்க முடிந்தது.

ஏன் காந்தமானது வடக்கு தெற்காக நிற்க வேண்டும்என ஆராய முற்பட்ட விஞ்ஞானிகள் காந்தங்களின் கவரும் தன்மையினைக் கொண்டு ஒரு இராட்சத காந்தமலையொன்று பூமியின் வடக்கில் வெகு தூரத்தில் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். சிலர் காந்தத்திற்கு உயிர் உண்டு என்றுகூட நம்பினர்.

முதலாம் எலிசபெத் மாகாராணியாரின் அரசவை வைத்தியரான வில்லியம் கில்பெட் என்பவரால் தான் முதன் முதலில் காந்தத்தைப்பற்றி ஒழுங்கான விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகள் தொடங்கப்பட்டன. இவர்தான் பூமியேஒரு ராட்சதகாந்தம் என்ற கருத்தை முதன்முதல் முன் வைத்தார். 1600 ஆம் ஆண்டில் சாந்தத்தைப் பற்றிய தனது முடிவுகளை புத்தகமொன்றில் எழுதினார்.

இவரதுகொள்கைமூன்றரை நூற்றாண்டுகளாக மறுக்கப் படவில்லை. எனினும் இவரின் கூற்றுப்படி புவியின் மையப் பகுதி இரும்பினால் ஆனதாக இருந்தபோதிலும் மையப் பகுதியில் வெபப நிலையானது 1000 பாகை சென்ரிகிரேட்டில் இருந்ததால் இந்த இரும்பு காந்தத்தன்மையை கொண்டதாக இருக்கமுடியாது. ஏனெனில் ஒருகாந்தமானது 760 பாகை சென்ரிகிரேட் வெப்பநிலைக்கு மேல் அதன் கர்ந்தத் தன்மையை இழந்துவிடும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் காந்தத்திற்தும் மின்சாரத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை மைக்கல் பரடே எனும் விஞ்ஞானி கண்டு பிடித்த பின்னர் தான் காந்தம் பற்றிய புதிய கொள்கையொன்று ஏற்படுத்தப் பட்டது.

பீட்டர் பெரக்ரினஸ் என்பவரால் முதன்முதலில் விவரிக்ப்பட்ட ஒரு சோதனையை அடிப்படையாகக் கொண்டு 1820 ஆம் ஆண்டளவில்

5 ஆம் பககம் பார்க்க

## சிறுகதை

# கேசவன்................ ஒருவன் மட்டும் தானா?

ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்.. சைக்கிள் மணி ஒலித்து ஓய்ந்தது- ''ஆரது?... என்ன விசயம்?'' குசினிக்குள் இருந்தபடியே ஜன்னலால் எட்டிப் பார்த்த கௌரி உரத்துக்குரல் கொடுத்தாள்- ''கேசவன் நிற்கிறாரோ'' ஒருவன் கேட்டான்- இரண்டு வாலிபர்கள் தனித்தனி சைக்கிளில் வந்திருப்பது தெரிந்தது-

குசினியை விட்டு வெளியே வந்த கௌரி படலையை நோக்கி நடக்கத் தொடங்கினாள்-

அதனிடையில் வீட்டின் முன் பகுதிக்கு வந்து விட்ட கேசவன் ''நில்லுங்கோ... வெளிக்கிட்டு வாறன்'' எனக் கூறிவிட்டு கிணற்றடிப் பக்கமாகப் போனான்-

''ஏன்.. அங்கேயே நிற்கிறியள்.. வாங்கோவன்... வந்து இருங்கோவன்'' அறைக்குள் இருந்து வெளியேறி வந்த பொன்னம்பலம் அழைப்பு விடுத்தார்-

''தம்பியவை வந்து இருங்கோவன் தம்பி வெளிக்கிட்டு வரட்டுமன்'' பொன்னம்பலத்தின் அழைப்பை அவரது மனைவி கௌரியும் எதிரொலித்தாள்-

சைக்கிள்ஸ்ராண்டைத்தட்டி அதனை நிறுத்திவிட்டு வீட்டின் முன்புறமாக இருந்த வராந்தாவில் கிடந்த கதிரைகளில் வந்து அமர்ந்து கொண்டனர் ரவியும் மூர்த்தியும்-

கௌரி குசினிக்குள் புகுந்து கொண்டாள்-

''நீங்கள் தம்பியோட படிக்கிறனியளோ'' பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார்-

''ஓமோம்... ரியூசன் வகுப்பில ஒண்டா படிச்சனாங்கள்-

''எப்படி... எக்ஸாம் எல்லாம் நல்லாய் செய்தியளோ''

''என்னத்தைநல்லா செய்து என்ன'' மூர்த்தி அலுத்துக் கொண்டான்- மூர்த்தியின் பதில் பொன்னம்பலத்தாரின் மூளையில் சில கேள்விகளை எழுப்பியது- எனினும் அடக்கிக் கொண்டவராக

''தம்பி... இந்த கிளார்க்.... அது இது எண்டு ஏதோ கன வேலையளுக்கு எல்லாம் இப்ப அப்ளிகேசன் கோல் பண்ணியிருக்காமே'' என பவ்யமாகக் கூறினார்-

''ஓமோம் .. கோல் பண்ணியிருக்குத்தான்- .. இப்ப வேலை தேடுறது தானே எங்களுக்கு வேலையாகிப் போச்சு'' மூர்த்தியே மீண்டும்பதிலளித்தான்-

''[illegible]

செய்தால் நல்லது தானே'' எனக் கூறிக்கொண்டு வந்தாள் கௌரி-

''அதுக்குப் பிறகு தான் என்ன பெரிசாய் கிழிக்கப் போகுதே.., அடுத்த நேரம் எங்கை ஓடுறது எண்டு தெரியாமல் அந்தரப்படேக்கை வேலை ஒண்டுதான் இப்ப இல்லாத குறையாக்கும்'' பொரிந்து கொண்டே சேர்ட்டுக்குள் தன்னைத் திணித்துக் கொண்டான் கேசவன்-

கௌரியும் பொன்னம்பலத்தாரும் மௌனமாகினர்- கேசவனோடு சேர்ந்து ரவியும் மூர்த்தியும் வெளியேறிப் போயினர்-

★ ★ ★

''தம்பியின்ர போக்கு வர வர ஒரு மாதிரிக் கிடக்கு- கவனிச்சனிரோ'' பொன்னம்பலம் கேட்டார்- 'சோதினைக்கெண்டு இவ்வளவு நாளும் ஒரு இடமும் போகாமல் இருந்துபடிச்சவன் தானே இப்ப சும்மா ஒரு மன அமைதிக்கு அங்க இங்க எண்டு போறான் அதில இப்ப என்னப்பா'' கௌரி பதில் அளித்தாள்-

''அதிலை ஒண்டுமில்லை — ஆனா முந்தி அவனோடை சேர்ந்து திரிந்த கண்ணன், ராஜன், முரளி அப்படியான பெடியளை இப்ப கன நாளா காணேல்ல. ஆனா புதுப் புது பெடியள் தேடி வாறாங்கள். அதோட அவன்ரை கதையிலும் சாடையா விரக்தி தெரியிற மாதிரிக்கிடக்கு அதுதான் யோசிக்கிறன்'' பொன்னம்பலத்தார் இழுத்தார்.

''நீங்கள் என்ன சொல்லுறியள் எண்டு எனக்கு விளங்கேல்ல''

''வாறவை.. ஆரார் எண்டு உமக்கு வடிவாத் தெரியுமோ?'' பொன்னம்பலம் அடுத்த புதிர்போட்டார்.

''ஆரப்பா இப்ப ரவியும் மூர்த்தியும் தானே வந்தது''

''அது சரியப்பா இவையின் [illegible] றியள்?''

''உமக்கு வாழைப்பழத்தை உரிச்சுத் தந்தால் தான் விழுங்குவீர் போல'' எனச்சினந்தபடியே ''இந்தப் பெடியளுக்கும் இயக்கத்தோட ஏதும் தொடர்பு இருக்குமோ'' எண்டுதான் சந்தேகப்படுறன் பொன்னம்பலம் முத்தாய்ப்பு வைத்தார்.

''சீச்சி— தம்பி படிச்ச பெடியன்— அப்பிடியெல்லாம் போகமாட்டான்'' கௌரி நம்பிக்கை வெளியிட்டாள்.

''உதெல்லாம் நம்பேலாது கவனமாய் இருக்க வேணும் கௌரி''

''என்னட்டை உள்ள நகை நட்டு எல்லாம்வித்து வெளிநாட்டுக்கு அனுப்பின உம்மடை கொண்ணற்றை மகனுக்கு ''தம்பியையும் கூப்பிடுமன்'' எண்டு எழுதின கடிதத்துக்கு ஆறு மாதமாய் பதிலில்லை. அங்கின மிடில் ஈஸ்ற்றுக்கு எண்டாலும் பிடிச்சு அனுப்புவம் எண்டால் அதுக்கும் வக்கில்லை பிறகு என்னத்தையாம் கவனமால் இருக்கிறது'' கௌரி வெடித்துச் சீறினாள்

''உமக்கு என்ரை ஆக்களை இடித்துப் பேசாட்டி திருப்தி வராது தானே''

'பின்னை என்ன எண்டு கேக்குறன். இந்த நாளையில அந்த பெட்டையளைவைச்சிருக்கலாம் ஒரு பெடியனை வைச்சிருக்கிறது எண்டால் வயித்தில நெருப்பைக் கட்டியிருக்கிற மாதிரிக் கிடக்கு அதுக்குள்ள நொட்டை வேற சொன்னா எப்படியிருக்கும்''

''இப்ப உம்மை ஆரப்பா நொட்டை சொன்னது'' பொன்னம்பலம் பணியலானார் கௌரி சாந்தமானாள்.

''நீர் சொன்னால் அவன் கேப்பான் ஆனபடியால்இந்தக் கிளார்க் வேலைக்கு அப்பிளிகேசன் போடச்சொல்லுமன்', பொன்னம்பலம் ஆலோசனை வெளியிட்டார்.

''உதெல்லாம் அவனோடை கதைச்சு மினக்கெடக் கூடாது நீங்கள் போய் போமை வாங்கிக் கொண்டு வந்து நிரப்பிப் போட்டுத் தாங்கோ நான் கையெழுத்து வாங்கித்தாறன் கௌரி கூறினாள்.

★ ★

''என்னப்பா உலகமிது சீயெண்டு போச்சு நினைக்க நினைக்கப் பத்திக்கொண்டு வருகுது இனியும்இருந்தென்ன எண்ட மாதிரிக் கிடக்கு சேர்ட்டைக் கழற்றிய படியே கேசவன் தனக்குத்தானே சொல்லிக் கொள்வதை கௌரி கேட்டாள்.

''என்ன தம்பி, ஆரோட கதைக்கிறாய்''

ஒருத்தரோடயும் இல்லையம்மா ரோட்டில வெளிக்கிட்டுப் போய் சனத்தைப் பார்க்க உடம்பெல்லாம் என்னவோ செய்யுது.கைக்குழந்தையோட கால் நடையா ஓடிவாற சனங்கள் இருக்கிறதுக்கு ஒரு கூரைக்கு வழியில்லாமல் மரங்களுக்கு கீழ குடித்தனம் நடத்துற ஆக்கள் வண்டில் வண்டிலாய் சாமான் சக்கட்டுக்களை ஏத்திக் கொண்டு வாற கோலம் உடுத்த உடுப்பைத் தவிரவேற எதையும் எடுத்து வர இயலாம அந்தரப் பட்டுப் போனதுகள் இப்பிடி எத்தின விதமான சனங்கள். இதுகள் படுகிற கஷ்டத்தையெல்லாம் பாக்கேக்கை என்னவோ மனசைப் பிழியுது.

''இப்பஎங்கைதம்பிபோட்டு வந்தன்'' கதையை மாற்றும் போக்கில் கௌரி அவனிடம் கேள்வி எழுப்பினாள்.

''அகதியளுக்கு உதவுறத்துக்காக கிடுகு, உடுப்பு, அப்பிடி இப்பிடி சாமானுகள் சேர்த்துக்குடுப்பமெண்டு தான் மூர்த்தி, ரவி ஆக்களோடை போட்டு வந்தனான்,' எனக் கூறி விட்டு ''ஒரு செம்பு பச்சத் தண்ணி தாம்மா'' என்றான்.

- இளையவன்

''ஏன் தம்பி மேலைக் கழுவிப் போட்டு வாவன் சாப்பிடலாம்''

கௌரி எடுத்துக்கூறினாள்.

★ ★

சாப்பாட்டை முடித்துக் கையை அலம்பிக் கொண்டு கேசவன் குசினியிலிருந்துவெளியேறவும் ''எனக்கு ஒரு அலு [illegible]குத் தாவினார்.

''ஓமோம்'' என விடை கொடுத்தாள் கௌரி.

''அங்க மேசையில எல்லாம் வைச்சிருக்கிறன்'' எனக் கூறிக் கொண்டே பொன்னம்பலம் புறப்படலானார்.

கதவில் கிடந்த துண்டொன்றை எடுத்து கையைத் துடைத்த கேசவன், மீண்டும் புறப்படுவதற்கு ஆயத்தமாக சேட்டைத் தூக்கினான்.

''நீயும் வெளிக்கிடப் போறியோ... தம்பி''

''ஓம் ஏன் அம்மா''

''இல்லைஉன்னோடைஆறுதலாய் கதைப்பம் எண்டு பாத்தன்''

''என்ன அம்மா! என்ன விசயம்?'' அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

''இல்லைகண்ணன், ராஜன், முரளி எல்லாம் இந்தக்கிளார்க் வேலைக்கு அப்ளிகேசன்போட்டிருக்கினமாம்'' அவள் இழுத்தாள்.

''அப்படியோ .. எனக்குத் தெரியாது''

''ஏன் தம்பி நீயும் போடன்''

''வீண் தண்டம் அம்மா போட்டால் போல என்ன எங்களுக்கு அவன் வேலையோ தரப்போறான் உதில செல வழிக்கிறகாசும்நேரமும்வீண்''

''உங்களத்தினசனம்போடுது நீயும் போட்டுப்பாரன் கிடைச்சா கிடைக்குது இல்லாட்டி என்னபெரிய நட்டமே' என்றவள்தொடர்ந்து... கல்லை எறி'விழுந்தால்மங்காய் போனால் கல்லுத்தானே' எனக் கூறி நிறுத்தினாள்

ஒருகணம் அவன் மௌனமானான் இந்த மௌனம் அவளது அகராதியில் சம்மதம் என்று அர்த்தப்பட்டிருக்க வேணும் அவள் அறைக்குள் புகுந்து நிரப்பி வைத்திருந்த அப்பிளிகேசன் போமை எடுத்து வந்தாள்.

''அப்பா எல்லாம் நிரப்பி வைச்சிருக்கிறார் நீ கையெழுத்தைப் போட்டுத்தா நான் அனுப்பி விடுகிறன்'' என்றபடி அவனிடம் நீட்டினாள்

''அம்மாஅப்போதை என்ன பழமொழி சொன்னனியள்'' என்றான் அவன்

''கல்லை எறி விழுந்தால் மாங்காய் போனால் கல்லுத் தானே''

அதுதான்சரிஎன்றவன்அந்த விண்ணப்பப்பத்திரத்தை கை நீட்டி வாங்கினான்

''பொறுதம்பி . . . பேனை எடுத்தாறன்'' என்று கூறி அவள் திரும்புவதற்கு இடையில் அந்தக் கடதாசியை இரண்டாக கிழித்தான் கேசவன்.

தாய் அவனையே ஆச்சரியத்தோடுபார்த்துக் கொண்டு நின்றாள்

கல்லை எறி விழுந்தால் மாங்காய் போனால் கல்லு''

---

## சிலுவை சுமந்த திலீபன்

- புதுவை இரத்தினதுரை

எங்கே என் தம்பி
எங்கே என் தம்பி
இங்கே இருந்தானே; இருந்தவனைக் காணவில்லை
எங்கே என் தம்பி
மெல்ல; மெல்ல ... ...... அந்த
விளக்கணையும் வேளையிலே
எல்லோரும் சேர்ந்து எண்ணையிடு என்கிறோமே
கல்லான நெஞ்சே நீ
கண் திறந்து பார்க்கவில்லை.
நா வரண்டு, நா வரண்டு
நாதமணி பேச்சிழந்து
பூ சுருண்ட மாதிரியாய் போய் முடிந்து விட்டானே!
காற்றே நீ மூசு
கடலலையே பொங்கி எழு
கூற்றவனா!
அவனைக் கொண்டுவந்து தூக்கிவிடு
எங்கே என் தம்பி, எங்கே என் தம்பி
இங்கே இருந்தானே இநந்தவனைக் காணவில்லை
என் இனிய திலீபனே!
ஒரு வார்த்தை
ஒரே ஒரு வார்த்தை மட்டும்
பேசி விடு.
தமிழீழம் என்ற தாரக மந்திரத்தைச்
சொல்லி விட்டு மீண்டும் தூங்கிவிடு.
மக்கள் சமுத்திரத்தில் மரணித்துவிட்ட வீரனே;
ஒரு வார்த்தை ஒரே ஒரு வார்த்தை
பேசி விட்டுத் தூங்கு
என் இனிய தோழனே!
உனது மரணப் படுக்கை கூட,
இங்கே மகத்துவமாகி விட்டது.
நீ கண் மூடியபடி தூங்குகிறாய்
அந்தத் தூக்கம் இங்கோர் புயலை உருவாக்குகிறது
உனக்குப் புரிகிறதா?
உனக்குப் புரியும்.
இந்தப் புயலுக்காகத்தானே நீ அமைதியானாய்.
நீ பேசாமல் படுத்திருக்கிறாய்.
அந்தப் படுக்கை இங்கோர்
பூகம்பத்தை வரவழைக்கிறது.
உன் சாவே இங்கோர் சரித்திரமாகி விட்டது,
செத்த பின் ஊர் கூடித்
தேம்புவது தான் இங்கு வழக்கம்,
ஆனால்
ஊரே தேம்பிக் கொண்டிருக்கும் போது
மரணித்த வரலாறு
உன்னுடன் தான் ஆரம்பமாகிறது.
சாவு பலதடவை உன்னைச் சந்திக்க வந்து
தோல்வி கண்டது.
இப்போது,
சாவை நீயாகச் சந்திக்கச் சென்று
வெற்றி கண்டு விட்டாய்.
என் இனிய திலீபனே
நீ கையில் ஆயுதம் ஏந்திய போதும்
உன்னை அருகில் இருந்து பார்த்துள்ளோம்
நீ நெஞ்சில் அகிம்சையை ஏற்றிய போதும்
அருகில் இருந்து பார்த்துள்ளோம்.

பலம் கேள்வி எழுப்பினார்-

''ஓமோம்... ரியூசன் வகுப்பில ஒண்டா படிச்சனாங்கள்-

''எப்படி... எக்ஸாம் எல்லாம் நல்லாய் செய்தியளோ''

''என்னத்தைநல்லா செய்து என்ன'' மூர்த்தி அலுத்துக் கொண்டான்-- மூர்த்தியின் பதில் பொன்னம்பலத்தாரின் மூளையில் சில கேள்விகளை எழுப்பியது- எனினும் அடக்கிக் கொண்டவராக

''தம்பி... இந்த கிளார்க்.... அது இது எண்டு ஏதோ கன வேலையளுக்கு எல்லாம் இப்ப அப்ளிகேசன் கோல் பண்ணியிருக்காமே'' என பவ்யமாகக் கூறினார்-

''ஓமோம் .. கோல் பண்ணியிருக்குத்தான்- .. இப்ப வேலை தேடுறது தானே எங்களுக்கு வேலையாகிப் போச்சு'' மூர்த்தியே மீண்டும்பதிலளித்தான்-

''ஓம் தம்பி... சோதனைமறுமொழி வரும் வரையுமாவது சும்மா வீண் பொழுதாய் போக்காமல் ஏதும் வேலை

என்னப்பா'' கெளரி பதில் அளித்தாள்-

''அதிலை ஒண்டுமில்லை — ஆனா முந்தி அவனோடை சேர்ந்து திரிந்த கண்ணன், ராஜன், முரளி அப்படியான பெடியளை இப்ப கன நாளா காணேல்ல. ஆனா புதுப் புது பெடியள் தேடி வாறாங்கள். அதோட அவன்ரை கதையிலும் சாடையா விரக்தி தெரியிற மாதிரிக்கிடக்கு அதுதான் யோசிக்கிறன்'' பொன்னம்பலத்தார் இழுத்தார்.

''நீங்கள் என்ன சொல்லுறியள் எண்டு எனக்கு விளங்கேல்ல''

''வாறவை .. ஆரார் எண்டு உமக்கு வடிவாத் தெரியுமோ?'' பொன்னம்பலம் அடுத்த புதிர்போட்டார்.

''ஆரப்பா இப்ப ரவியும் மூர்த்தியும் தானே வந்தது''

''அது சரியப்பா இவையின்ரை பின்னணி ஏதும் உமக்குத் தெரியுமோ?''

''என்னப்பா என்ன கேட்கி

வைச்சிருக்கிறது எண்டால் வயித்தில நெருப்பைக் கட்டியிருக்கிற மாதிரிக் கிடக்கு அதுக்குள்ள நொட்டை வேற சொன்னா எப்படியிருக்கும்''

''இப்ப உம்மை ஆரப்பா நொட்டை சொன்னது'' பொன்னம்பலம் பணியலானார் கெளரி சாந்தமானாள்.

''நீர் சொன்னால் அவன் கேப்பான் ஆனபடியால்இந்தக் கிளார்க் வேலைக்கு அப்பிளிகேசன் போடச்சொல்லுமன்', பொன்னம்பலம் ஆலோசனை வெளியிட்டார்.

''உதெல்லாம் அவனோடை கதைச்சு மினக்கெடக் கூடாது நீங்கள் போய் போமை வாங்கிக் கொண்டு வந்து நிரப்பிப் போட்டுத் தாங்கோ நான் கையெழுத்து வாங்கித்தாறன் கெளரி கூறினாள்.

பொன்னம்பலம் ஒருவித உற்சாகத்தோடு சைக்கிளுக்குத்தாவினார்.

துக்காக கிடுகு, உடுப்பு, அப்பிடி இப்பிடி சாமானுகள் சேர்த்துக்குடுப்பமெண்டுதான் மூர்த்தி, ரவி ஆக்களோடை போட்டு வந்தனான்,' எனக் கூறி விட்டு ''ஒரு செம்பு பச்சத் தண்ணி தாம்மா'' என்றான்.

## -இளையவன்

''ஏன் தம்பி மேலைக் கழுவிப் போட்டு வாவன் சாப்பிடலாம்''

கெளரி எடுத்துக்கூறினாள்.

★ ★

சாப்பாட்டை முடித்துக் கையை அலம்பிக் கொண்டு கேசவன் குசினியிலிருந்துவெளியேறவும் ''எனக்கு ஒரு அலுவல் கிடக்கு நான் வெளியில போட்டு வாறன்'' என்றபடி பொன்னம்பலம் சைக்கிளுக்

''அப்பா எல்லாம் நிரப்பி வைச்சிருக்கிறார் நீ கையெழுத்தைப் போட்டுத்தா நான் அனுப்பி விடுகிறன்" என்றபடி அவனிடம் நீட்டினாள்

''அம்மாஅப்போதை என்ன பழமொழி சொன்னனியள்'' என்றான் அவன்

''கல்லை எறி விழுந்தால் மாங்காய் போனால் கல்லுத் தானே''

அதுதான்சரிஎன்றவன் அந்த விண்ணப்பப்பத்திரத்தை கை நீட்டி வாங்கினான்

''பொறுதம்பி . . . பேனை எடுத்தாறன்'' என்று கூறி அவள் திரும்புவதற்கு இடையில் அந்தக் கடதாசியை இரண்டாக கிழித்தான் கேசவன்.

தாய் அவனையே ஆச்சரியத்தோடுபார்த்துக் கொண்டு நின்றாள்

கல்லை எறி விழுந்தால் மாங்காய் போனால் கல்லு'' என்று அவன் திரும்பக்கூறியது வீட்டின் சுவர்களில் மோதி எதிரொலித்தது.


# புயலைப் பிரசவித்தான்

சிந்திய ரத்தம் காய்ந்திடும் முன்னரே
ஏந்திய ஆயுதம் போடெனச் சொல்லிய
காந்திய நாட்டின் கபடம் உணர்த்திட
முந்தியே திலீபன் முடுக்கினான் போரை!

படுத்திருந்தபடியே புயலைப் பிரசவித்த
விடுதலைப் புலியே திலீபனே!
உன் எண்ணம் இம் மண்ணில் செயலாக
என்றும் உழைத்திட உறுதி ஏற்கிறோம்.



## இனோகா மோட்டார்ஸ்

370, பருத்தித்துறை வீதி-யாழ்ப்பாணம்

## INOKA MOTORS

370, POINT PEDRO ROAD, JAFFNA

(சி-5107)


நீ பேசாமல் படுத்திருக்கிறாய்.
அந்தப் படுக்கை இங்கோர்
பூகம்பத்தை வரவழைக்கிறது.
உன் சாவே இங்கோர் சரித்திரமாகி விட்டது,
செத்த பின் ஊர் கூடித்
தேம்புவது தான் இங்கு வழக்கம்,
ஆனால்
ஊரே தேம்பிக் கொண்டிருக்கும் போது
மரணித்த வரலாறு
உன்னுடன் தான் ஆரம்பமாகிறது.
சாவு பலதடவை உன்னைச் சந்திக்க வந்து
தோல்வி கண்டது.
இப்போது,
சாவை நீயாகச் சந்திக்கச் சென்று
வெற்றி கண்டு விட்டாய்.
என் இனிய திலீபனே
நீ கையில் ஆயுதம் ஏந்திய போதும்
உன்னை அருகில் இருந்து பார்த்துள்ளோம்
நீ நெஞ்சில் அகிம்சையை ஏற்றிய போதும்
அருகில் இருந்து பார்த்துள்ளோம்.
எந்த வித்தியாசமும் தெரியவில்லை
போராளிக்குரிய போர்க்குணமே
உன்னில் ... தெரிந்தது,
இந்திய அரசே!
உனது மௌனம்
இங்கோர் மரணத்தை நிகழ்த்தி விட்டது
இந்திய அரசே!
உனது ஆதிக்க அகம்பாவம்
இங்கோர் தியாகத்தைச் செயலிழக்கச் செய்து விட்டது
திலீபன் அமைதியானானே ஒழிய,
அழிந்து விடவில்லை.
அவன் சுருண்டு கிடப்பதைப் பார்த்தே
பலர் எழுந்து கொண்டனர்.
இந்திய அரசே!
இது உனக்குப் புரிகிறதா?
தம்பி திலீபன் உன்னிடம் என்னதான் கேட்டான்?
எங்களை
சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கவிடு என்றான்
எங்கள் மண்ணின் இறைமையைத் தா என்றான்
இது குற்றமா?
இதற்காகத்தானே போராடினான்
இதற்காகத் தானே வாதாடினான்
இதற்கு என்ன பதில் தரப் போகிறாய்
உனது பதிலை
நேற்று வந்த விமானத்திலும் எதிர்பார்த்தோம்
தாமதித்து விட்டாய்.
நீ கடத்திய ஒவ்வொரு நொடிப் பொழுதிலும்
இங்கோர் புயலை உருவாக்கி விட்டாய்.
திலீபன் என்ற புயல்
உன்னைச் சும்மா விடாது.
உசுப்பியே தீரும்.
எங்கே என் தம்பி
எங்கே என் தம்பி
இங்கே இருந்தானே இருந்தவனைக் காணவில்லை

எங்கே என் தம்பி
என் இனிய திலீபனே!
நிம்மதியாய்த் தூங்கு
நிலம் வெடிக்கப் போகிறது
நிம்மதியாய்த் தூங்கு நிலம் வெடிக்கப் போகிறது
காற்றே நீ மூசு
கடலலையே பொங்கி எழு
கூற்றவனா!
அவனைக் கொண்டு வந்து தூக்கி விடு

27. 9. 87

நன்றி: ஈழமுரசு

# இராணுவத்தின் மூலதந்திரோபாயம் கேள்விக்குரியதாக மாறியுள்ளது

''ஜே வி. பி. ஒரு சமூக மாற்றத்திற்காகப் போராடியது போல் அன்றி விடுதலைப் புலிகள் ஒரு பிரதேசத்திற்காகப் போராடுகின்றனர். எனவே பிரதேசத்தைக் கைப்பற்றி பாதுகாப்பதென்பது இங்கு இராணுவத்திற்கு முக்கியமானது. இது ஈழப்போரில் இருந்து சிறிலங்கா பெற்ற படிப்பினையாகும்'' கூட்டுப் படை நடவடிக்கை தலைமையகத்தின் (ஜே ஓ. சி.) அதிகாரங்கள் முப்படைத் தளபதிக்கு மாற்றப்பட்டமை குறித்தும், முப்படைத் தளபதிகளின் புதிய போர் யுக்தி குறித்தும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் அதன் விசேட செய்தியாளர் எழுதிய நீண்ட கட்டுரை ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் ஒப்பரேசன் பலவேகய II, ஒப்பரேசன் சத்பலய (முல்லைத்தீவிலிருந்து அளம்பில் நோக்கி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை) ஆகியவை குறித்தும் விமர்சனம் செய்துள்ள இக்கட்டுரையாளர் ''பாதுகாப்புப் படையினர் தற்பொழுது நிலத்தைக் கைப்பற்றும் விதத்திலும், கைப்பற்றும் பகுதியைப் பாதுகாக்கும் விதத்திலும் விடுதலைப் புலிகளைப் போத்தல் வாய் ஒன்றிற்குள் தள்ளுவதுமான செயற்பாடொன்றில் ஈடுபட்டுள்ளனர்'' என்றார்.

அதாவது ''தாக்கிவிட்டு மீளும் தந்திரோபாயம்'' புலிகளை வெற்றி கொள்ளப் போதுமானதாக இல்லை என அதிகார அமைப்பு மாற்றம் மூலம் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட முப்படைகளின் தளபதிகளும் கருதினர். இதனால், வடபகுதிப் போரில் ஜே ஓ சி யின் அதாவது லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ வகுத்த மூலயுத்த தந்திரோபாயம் கைவிடப்பட்டதெனலாம்.

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ''புலிகளிடமிருந்து பிரதேசங்களை மீட்டு அவற்றைப் பாதுகாக்கபாரிய அளவில் துருப்புக்களை அங்கு நிறுத்திவைப்பதும், அத்துருப்புக்கள் நாளாந்தம் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி மடிவதும் வீண். எனவே புலிகளின் பிரதேசத்திற்குள் சென்று மீள்வதே புலிகளைப் பலவீனப் படுத்துவதற்கான பிரதான தந்திரோபாயம்'' எனக் கருதியதாக தெரிகின்றது.

இதன் பிரகாரமே பல இராணுவ நடவடிக்கைகள் வன்னியிலும், மணலாற்றிலும் மேற்கொள்ளப் பட்டன. டென்சில் கொப்பேகடுவவின் இத்தந்திரோபாயம் வடக்கில் புலிகளின் பலம், கிழக்கின் அனுபவம் என்பனவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகவே ஒரு பகுதி இராணுவ விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் ஜே.ஓ சி யிடம் இருந்து அதிகாரம் முப்படைகளின் தளபதிகளிடம் மாற்றப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் சத்பலய (அளம்பிலை பிடித்தமை) சண்டமாருதம் (தெல்லிப்பளையை பிடித்தமை) ஒப்பரேசன் பலவேகய 11 (வெற்றிலைக்கேணி -ஆனையிறவு இராணுவ வேலி அமைக்கப்பட்டமை) என்பவை புதிய மூலஇராணுவ தந்திரோபாயத்திற்குக் கிடைக்கப் பெற்ற வெற்றிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டன.

இவ் வெற்றிகளுக்காக புகழ் பாடிய பத்திரிகைகள் முப்படைத் தளதிகளுக்குப் பெரும் பாராட்டுக்களைத் தெரிவித்தன. 'இந்திய இராணுவத்தால் கைப்பற்றப்படாத அளம்பில் கைப்பற்றப்பட்டதும் (இந்திய இராணுவம் அளம்பிலில் இருந்தது எனபதுகுறிப்பிடத்தக்கது) மூன்று முறை முயற்சித்து கைப்பற்றப்பட முடியாத தெல்லிப்பளை கைப்பற்றப்பட்டதும் பெரும் வெற்றி என்றது சண்டே ரைம்ஸ்''ஜே.ஓ சி. யையும் அதன் தளபதியையும் கடுமையாக விமர்சித்த ஒப்சோபர் 'இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சிசில்வைத்திய ரெட்ணா தலைமையில் இராணுவம் வெற்றிகளைக் குவிக்கின்றதென்றும் இதனால் முப்படைகளையும் உள்ளடக்கிய ஜே ஓ. சி. அமைப்பும் அதன் தளபதியான ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் பதவியும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்காவின் பதவியும் தேவைதானா''என்றும்கேள்வி எழுப்பியது.

இந் நிலையில்தான், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான புதிய திட்டமும் வகுக்கப்பட்டது இதன் பிரகாரம் ''யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி வைத்திருப்பது எங்ஙனம் என்பது பற்றி - முழுமையான சிவில் நிர்வாகம்-உட்பட திட்டம் வகுக்கப்பட்டு அதற்கு அரசியல் தலைமைப் பீடத்தின் அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றது.'' என கொழும்பிலிருந்து வெளியாகிய பத்திரிகை ஒன்று தெரிவித்தது

ஆனால், சிறிலங்கா இராணுவ அரசியல் வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்திய லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, மேஜர். ஜெனரல் விஜய விமலரெட்ணா உட்பட ஒன்பது அதிகாரிகளின் மரணம், யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் உடனடியாக மேற் கொள்ளக் கூடிய தென்றா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அதை உறுதிப்படுத்துமாப் போல் யாழ்ப்பாண தாக்குதல் கொல்லப்பட்டதளபதிகள்தாக்குதல்நடத்தத்திட்டமிட்டதிகதியில்நடத்தப்படவில்லை என்பதோடு, அத்தாக்குதல் திட்டம் அதாவது அவ்யுதத தந்திரோபாயம் கைவிடப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

இதேவேளை, யாழ்ப்பாணத் தாக்குதல் திட்டமசிறிய மாற்றத்துடன் மேற்கொள்ளப்படும் என அறிவிததிருந்த சிறிலங்கா இராணுவத் தலைமைகடந்த மாதம்21 ஆம் திகதி ஆரம்பித்த 'பூமிபதிர்ச்சி' எனப் பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கை மாதகலைக் கைப்பற்றியதோடு நிறுத்தப் பட்டது

இவ் இராணுவ நடவடிக்கையும், இராணுவத் தலைமைப் பீடத்தின் புதிய தந்திரோபாயத்தின்படி கைப்பற்றப் பட்ட பகுதியை தக்கவைத்துக் கொள்ளுதல் என்ற ரீதியிலேயே மேற்கொள்ளப் பட்டது. இதன் பிரகாரம், இத்தாக்குதலில் கைப்பற்றிய பகுதியை இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ளும் முயற்சிகளையும் மேற்கொண்டது.

ஆனால் இறுதியாக குடாநாட்டினுள் இராணுவம் மேற்கொண்ட 'சதுரங்கம்' என்னும் இராணுவ நடவடிக்கை இராணுவ தலைமைப் பீடத்தின் புதிய தந்திரோபாயத்திற்கு ஏற்ற வகையில் அமையவில்லை 'ஒப்பரேசன் சதுரங்கம்' பெரு வெற்றியென அறிவித்த சிறிலங்கா இராணுவத் தலைமை பண்டத்தரிப்பில் நிலைகொள்ள முடியாமல் வெளியேறியுள்ளது இந்நிலையில் சிறிலங்கா இராணுவத் தலைமையின் தநதிரோபாயம் ஒப்பரேசன் சதுரங்கத்தில் தோல்வி கண்டுள்ளதா? அதாவது புலிகளின் தாக்குதல்களுககு ஈடுகொடுத்து பண்டத்தரிப்பு பிரதேசத்தை கைப்பற்றிப் பாதுகாக்க முடியாது போய்விட்டதா? அல்லது இராணுவத்தாலோ தந்திரோபாயததில் தவிர்க்க முடியாமல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்து பெரும் வினா எழுந்துள்ளது

அதாவது 'ஒப்பரேசன் சதுரங்கம்' இராணுவத்தரப்பினர் சிறிய அளவினதாக மேற்கொண்ட ஒருதாக்குதல் நடவடிக்கை அல்ல. இராணுவத்தளபதி லெப் ஜெனரல் சிசில்வைத்திய ரெட்ணாவின் மேற்பார்வையில், வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரிசில்வா, யாழ் மாவட்டத் தளபதி பிரிகேடியர் தளுவத்த ஆகியோரின் நேரடி வழிநடத்தலில் மேற்கொள்ளப்பட்டதாகும்.

இந்நடவடிக்கையின் பெயர் குறித்து விளக்கம் கொடுத்த சிசில் வைத்திய ரெட்ணா, தேர், குதிரை, யானைப்படைகளுடன் காலாட்படைகளையும் கொண்டு போராடிய வரலாற்றை நினைவு கூரும் வகையிலேயே இந்த இராணுவ நடவடிக்கைக்கு சதுரங்க நடவடிக்கை எனப் பெயரிடப்பட்டதாகத் தெரிவித்தார்.

மேலும் டாங்கிப் பிரிவு புகுத்தப்பட்டு ஒரு வருடமாவதைக் குறிக்கும் நோக்கில் செய்யப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையின் போது செக்கோ செலவோக்கிய டாங்கிகள் பயன்படுத்தப் பட்டதாகவும், அவை சீன டாங்கிகளை விட திறம்படச் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.


அதாவது, 'ஒப்பரேசன் சதுரங்கம்' சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டஓர் இராணுவ நடவடிக்கை என்று கூறிவிட முடியாது. புதிய டாங்கிகளின் துணைகொண்டு நடத்தப் பட்ட தாக்குதலாகும். இந் நிலையில், பிரதேசத்தைக் கைப்பற்றிப்பாதுகாப்பது என்ற தற்போதைய யுத்த தந்திரோபாயம் கடைப்பிடிக்கப்படாது. ''தாக்கி விட்டுமீளும்தந்திரோபாயம்'' கடைப்பிடிக்கப்பட்டது குறித்து கேள்வி எழுந்துள்ளது

ஆனால், தமது புதிய தந்திரோபாயம் ஒப்பரேசன் சதுரங்கத்தின் போது தோல்வியில் முடிவுற்றதையோ அன்றி பின்பற்றப்படவில்லை என்பதையோ இராணுவத்தரப்பு ஒப்புக் கொள்ளவில்லை. ''பண்டத்தரிப்புப் பிரதேசமும் கைப்பற்றப்பட்டுள்ளது'' என வடபகுதி இராணுவத் தளபதி தெரிவித்துள்ளமை இதனை விளங்கிக் கொள்ள ஏதுவாகிறது அதாவது பண்டத்தரிப்பில தாம் விரட்டப்பட்டதையோ அன்றி பின் வாங்கியதையோ அவர் வெளிப்படுத்தவில்லை என்பது முக்கியமானதாகும்.

இந்நிலையில் இராணுவத்தின் புதிய தந்திரோபாயம் எந்தளவிற்கு தொடரும் என்பது குறித்து அவதானிகள் விமர்சிக்கத் தொடங்கியுள்ளனர். லெப் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ போன்றோரின் நேரடி அனுபவத்தால் உருவாக்கப்பட்ட ''தாக்கிவிட்டு மீளும் தந்திரோபாயத்திற்கும்'', லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்ணா போன்றோரின் அவதானிப்பை அடிப்படையாகக் கொண்ட இராணுவத் தந்திரோபாயத்திற்கும் இடையில் உள்ள இடைவெளியே இன்று இராணுவத் தந்திரோபாயத்தில் உள்ள முரண்பாட்டிற்குக் காரணமாகும். இவை இரண்டையும் ஒருங்கிணைக்கக் கூடிய ஒரு தந்திரோபாயத்தைச் சிறிலங்கா இராணுவத்

(6ஆம் பக்கம் பார்க்க)

**ஜெயராஜ்**




## பூமியின்...

பரடே தம் ஆராய்ச்சிகளை தொடங்கினார். இச்சோதனையில் ஒரு காகிதத்தின் மேல் இரும்புத் தூள்களைச் சீராகத் தூவிய பின்புஅதனை ஒரு காந்தத்தின் மேல் வைக்கவேண்டும் வைத்தபின் அந்த காகிதத்தை மெதுவாகத் தட்டவேண்டும் தட்டிய உடனே இந்த இரும்புத் ஞானி மின்சாரமானது ஒரு கம்பிச் சுருளில் செலுத்தப் படும்போதுஅக்கம்பிச்சுருளுக்கு அண்மையிலிருந்த திசைகாட்டியின் முள் அசைவதை அவதானித்தார். இவ் அவதானிப்பை விளக்கிய பரடே ஒரு கம்பிச்சுருளினூடாக மின்சாரம்செல்லும் போது காந்தப் புலம் உருவாகிறது. அக்காந்தப் புலமே திசைகாட்டியிலுள்ள காந்தத்தில் அசைவை யின் சோதனைகள் காந்த விசைக்கோடுகளை ஒரு கம்பிச் சுருள் வெட்டுமானால் மின்சாரம் பிறப்பிக்கப்படும் எனகாட்டின. இதன் மூலம் ஒரு நிலையான காந்தத்தை கம்பிச்சுருளினுள் இயங்க வைப்பதன் மூலம் மின்சாரத்தைப்பிறபபிக்கும் டைனமோ சாதனம் உருவாகியது.

## "வரலாறு மீண்டும் திரும்புகிறது"

''வடக்குக்கிழக்கில் குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் இலங்கைக்கு படையெடுத்து வநதனர். சிங்கள பௌத்த ளுக்கு உற்சாக மூட்ட மீண்டும ஒரு மகா நாம தேரர் ங்களாக பரிணமித்து இருக்கின்றன

என அதிகார அமைப்பு மாற்றம் மூலம் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட முப்படைகளின் தளபதிகளும் கருதினர். இதனால், வடபகுதிப் போரில் ஜே ஓ சி யின் அதாவது லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ வகுத்த மூலயுத்த தந்திரோபாயம் கைவிடப்பட்டதென

இவ் வெற்றிகளுக்காக புகழ்பாடிய பத்திரிகைகள் முப்படைத் தளதிகளுக்குப் பெரும் பாராட்டுக்களைத் தெரிவித்தன. 'இந்திய இராணுவத்தால் கைப்பற்றப்படாத அளம்பில் கைப்பற்றப்பட்டதும் (இந்திய இராணுவம் அளம்பிலில் இருந்து எனபதுகுறிப்பிடத்தக்கது) மூன்று முறை

ணம், யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் உடனடியாக மேற் கொள்ளக் கூடிய தென்றா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. அதை உறுதிப்படுத்துமாப் போல் யாழ்ப்பாண தாக்குதல் கொல்லப்பட்டதளபதிகள் தாக்குதல்நடத்தத்திட்டமிட்டதிகதியில்நடத்தப்படவில்லை என்பதோடு,

பாயம் ஒப்பரேசன் சதுரங்கத்தில் தோல்வி கண்டுள்ளதா? அதாவது புலிகளின் தாக்குதல்களுககு ஈடுகொடுத்து பண்டத்தரிப்பு பிரதேசத்தை கைப்பற்றிப் பாதுகாக்க முடியாது போய்விட்டதா? அல்லது இராணுவத்தாலோ தந்திரோபாயததில் தவிர்க்க முடியாமல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்து பெரும் வினா எழுந்துள்ளது அதாவது 'ஒப்பரேசன் சது

ற்றை நினைவுகூரும் வகையிலேயே இந்த இராணுவ நடவடிக்கைக்கு சதுரங்க நடவடிக்கை எனப் பெயரிடப்பட்டதாகத் தெரிவித்தார்.

மேலும் டாங்கிப் பிரிவு புகுத்தப்பட்டு ஒரு வருடமாவதைக் குறிக்கும் நோக்கில் செய்யப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையின் போது செக்கோ செலவோக்கிய டாங்கிகள் பயன்படுத்தப்பட்டதாகவும், அவை சீன

கத்தின் போது தோல்வியில் முடிவுற்றதையோ அன்றி பின்பற்றப்படவில்லை என்பதையோ இராணுவத்தரப்பு ஒப்புக்கொள்ளவில்லை. ''பண்டத்தரிப்புப் பிரதேசமும் கைப்பற்றப்பட்டுள்ளது'' என வடபகுதி இராணுவத் தளபதி தெரிவித்துள்ளமை இதனை விளங்கிக் கொள்ள ஏதுவாகிறது அதாவது பண்டத்தரிப்பில தாம் விரட்டப்பட்டதை

ரெட்ணா போன்றோரின் அவதானிப்பை அடிப்படையாகக் கொண்ட இராணுவத் தந்திரோபாயத்திற்கும் இடையில் உள்ள இடைவெளியே இன்று இராணுவத் தந்திரோபாயத்தில் உள்ள முரண்பாட்டிற்குக் காரணமாகும். இவை இரண்டையும் ஒருங்கிணைக்கக் கூடிய ஒரு தந்திரோபாயத்தைச் சிறிலங்கா இராணுவத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பூமியின்...

பரடே தம் ஆராய்ச்சிகளை தொடங்கினார். இச்சோதனையில் ஒரு காகிதத்தின் மேல் இரும்புத் தூள்களைச் சீராகத் தூவிய பின்புஅதனை ஒரு காந்தத்தின் மேல் வைக்கவேண்டும் வைத்த பின் அந்த காகிதத்தை மெதுவாகத் தட்டவேண்டும் தட்டிய உடனே இந்த இரும்புத் துகள்கள் காந்தத்தின் வட முனையிலிருந்து தென் முனைக்கு ஒழுங்கான வளை கோடுகளாக அமைந்து விடுவதை அவதானிக்கலாம். இவ்வளை கோடுகள் காந்த விசைக் கோடுகளின்பாதையை குறிக்கின்றன என்ற கருத்தை பரடே தெரிவித்தார். அதாவது ஒரு காந்தத்தைச் சுற்றிலும் காந்தப்புலம் காணப்படுகிறது என பரடே முடிவு செய்தார்,

இக் காலத்தில் ஹன்ஸ் கிறிஸ்டியன் என்னும் விஞ்ஞானி மின்சாரமானது ஒரு கம்பிச் சுருளில் செலுத்தப் படும்போதுஅக்கம்பிச்சுருளுக்கு அண்மையிலிருந்த திசைகாட்டியின் முள் அசைவதை அவதானித்தார். இவ் அவதானிப்பை விளக்கிய பரடே ஒரு கம்பிச்சுருளினூடாக மின்சாரம் செல்லும் போது காந்தப் புலம் உருவாகிறது. அக்காந்தப் புலமே திசைகாட்டியிலுள்ள காந்தத்தில் அசைவை ஏற்படுத்துகிறது என தெரிவித்தார்.

இதிலிருந்து மின்சாரத்தினால் ஒரு காந்தப்புலத்தை ஏற்படுத்த முடியுமாயின் காந்தத்தினால் மின்சாரத்தை ஏன் ஏற்படுத்த முடியாது? என பரடே சிந்தித்தார். இச்சிந்தனையின் விளைவே மனித இனத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் மின் பிறப்பாக்கியாகிய டைனமோ தோன்ற காரணமாகியது.

1831 ஆம் ஆண்டு பரடேயின் சோதனைகள் காந்த விசைக்கோடுகளை ஒரு கம்பிச் சுருள் வெட்டுமானால் மின்சாரம் பிறப்பிக்கப்படும் எனகாட்டின. இதன் மூலம் ஒரு நிலையான காந்தத்தை கம்பிச்சுருளினுள் இயங்க வைப்பதன் மூலம் மின்சாரத்தைப்பிறபபிக்கும் டைனமோ சாதனம் உருவாகியது.

அத்துடன் மின் படிமாற்றிகளும் (Transformer) உருவாக்கப்பட்டன.

காந்தத்திற்கும் மின்சாரத்திற்கும் உள்ள இந்தநெருங்கிய தொடர்பானது பூமியின் காந்தத்தைப்பற்றிய விளக்கத்திற்கு வழிகாட்டுகின்றன திசைகாட்டும் கருவியின் ஊசியானது புவியின் காந்த விசைக் கோடுகளைப் பின் பற்றிச் செல்கின்றது. இக் கோடுகள் கனடாவின் வடக்குப் பகுதியில் இருக்கும் புவியின் வடகாந்த முனையிலிருந்து அண்டார்டிகாவின் முடிவில் இருக்கும் பூமியின் தென்காந்த முனையில் முடிவடைகிறது.

காந்தப்புலத்தின் அளவினை அளவிடும் காந்தமானியினை எடுத்துச்சென்ற செய்மதிகள் பூமிக்குமேல்மிக உயரத்தில் கூட காந்தப் புலம் இருப்பதாக தெரிவிக்கின்றன. இவ் ஆராய்ச்சிகள் பூமியின் உள்ளே மின்சாரம் பாய்வதனாலேயே காந்தப் புலம் உருவாக்கப்படுகிறது என்பதை காட்டுகின்றன என புதிய விளக்கம் அளிக்கப்படுகிறது,

வால்டர். எம். எல்சாசர் என்ற பௌதிக விஞ்ஞானி வேறொரு விளக்கத்தைக் கொடுத்துள்ளார். பூமியானது தன்னைத்தானேசுற்றும்போது அதன் நடுப்பகுதியிலுள்ள உருகியஇரும்புக்குளம்பில்மேற்கிலிருந்து கிழக்காகச்செல்லும் வேகம் குறைந்த அலைகள் உருவாகின்றன. இவ் அலைகள் உருவாக்கும் மின்சாரமே காந்தவிசைக் கோடுகளை உருவாக்குகின்றன என அவர் தெரிவித்தார்.

இவ்வாறு பூமியின் காந்தத் தன்மைக்கு விளக்கம் கொடுக்கப்பட்டபோதிலும் காந்தத்தின் திசைமாறும் தன்மைக்கு விளக்கம் அளிக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

## "எண்டவர்" விண்வெளிக் கப்பல்

1993ஆம் ஆண்டு மே மாதமளவில் அமெரிக்கர்கள் 'எண்டவர்' (ENDEAVOUR) எனப்படும் புதிய விண்வெளிக் கப்பல் ஒன்றை விண்வெளி ஆராய்ச்சிகளுக்கென்று பறக்க விட திட்டமிட்டுள்ளார்கள்.

சுமார் நான்கு ஆண்டு காலமாக பெரும் பாடு பட்டு 180 கோடி டொலர் செலவழித்து கடந்த ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட விண்வெளிக் கப்பல் தான் இந்த 'எண்டவர்' இந்த ஆங்கிலச் சொல்லுக்கு தமிழில் 'பெரும் முயற்சி' என்று பொருள் படும் பெயரிலேயே இதை உருவாக்க எவ்வளவு முயற்சி செய்தார்கள் என்பதை புரிய வைத்துள்ளார்கள் இப்படியானதொரு பெயரை இதற்கு வைத்தவர்கள் யார் தெரியுமா? அமெரிக்காவின் பாடசாலை மாணவர்கள் தான் இதனை பொருத்தமான பெயர் என தேர்ந்து எடுத்தவர் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்.

ஏற்கனவே அமெரிக்காவிடம் உள்ள மற்ற விண்வெளிக் கப்பல்களை விட இதில் காணப்படும் சிறப்பம்சம் யாதெனில் ஒடுங்கிய ஓடுபாதையிலும் கூட இலகுவாக தரையில் இறங்கும் வல்லமை கொண்டது முதன் முதலாக மிகப் பெரிய 'பரசூட்' இதில் பொருத்தப்பட்டுள்ளது விண்ணில் இருந்து கீழே இறங்கும் போதே 'பரசூட் விரிந்து அதன் வேகம் குறைக்கப்படும் மற்றுமோர் சிறப்பு தொடர்ந்து 28 நாட்கள் விண்வெளியில் வலம் வரக்கூடியது இந்த 'எண்டவர்' விண்வெளிக் கப்பல் மற்றவைகள் இதில் அரைவாசி நாட்களே விண்வெளியில் பறக்கக்கூடியவை.

'எண்டவர்' என்பது பிரிட்டனைச் சேர்ந்த கப்டன் ஜேம்ஸ் குக் தனது கடற்பயணங்களுக்கு பயன்படுத்திய கப்பலின் பெயர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தகவல்:
கி. செல்மர் எமில்
ஊர்காவற்றுறை

# "வரலாறு மீண்டும் திரும்புகிறது"

''வடக்குக்கிழக்கில் குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் சிங்கள மக்கள் அச்சமுற்ற நிலையில் அங்கிருந்து தப்பியோடுகின்றனர் இவ்வாறாகவே தென் இந்திய ஆக்கிரமிப்புக்கு பயந்து கலாவேவ மக்கள் உருகுணைப் பிரதேசத்திற்கு தப்பியோடினார்கள். இந்த நிலையில் மகாநாம தேரரின் உதவியுடன் தாது சேனன் சிங்கள மக்களின் அச்சத்தைப் போக்கினான்.''

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது இதனைக் குறிப்பிட்டார் பிரேமதாசா அதிகமாக தனது பேச்சுக்களில் பௌத்த ஜாதகக்கதைகளைக் கூறி மக்களை தன்வசம் இழுப்பதில் அக்கறையாக இருந்து வருபவர் இந்த வரலாற்றுக் கதையினை கூறியதன் மூலம் இரண்டு விளக்கத்தினை சிங்கள மக்களுக்கு கோடு காட்டியுள்ளார்.

முதலாவதாகதாதுசேனனைப்போல இக்காலத்தில் சிங்கள மக்களின் பாதுகாவலன் யார் என்பதை விளக்க முற்படுவது. மற்றொன்று இந்த தாது சேனனுக்குஉதவியதாக கூறப்படும் மகாநாமதேரர் யார்? இவரது வரலாற்றுப்பின்னணி என்ன என்பதினை குறிப்பிடுவது.

முதலாவதாக குறிப்பிடும் தாதுசேனன் என்ற பாதுகாவலனாக அவர் தன்னைக்காட்ட முற்படுகின்றார் இந்திய எதிர்ப்புக் கொள்கையினைக்கொண்டிருந்த பிரேமதாசா இதனை மக்களுக்கு இலகுவாக எடுத்துக் கூறுகிறார்.

தாயாதி சண்டைகளினால் தாதுசேனனுக்கு எதிராக அவனது உறவினர்கள் தென் இந்திய தமிழ் மன்னர்களின் உதவியினை நாடியிருந்தனர். இங்கே அவர்கள் தமதுசொந்த நலனைஅதாவது ஆட்சியினை பெறுவது என்ற நோக்கிலேயே தென் இந்திய உதவியினைப் பெற்றனர். ஆதலால் அவர்கள் இலங்கைக்கு படையெடுத்து வந்தனர். சிங்கள பௌத்த மக்கள் இதனால் பாதிப்படைந்து உருகுணைக்குஇடம் பெயர்ந்து சென்றனர். இந்த நிலையில தாதுசேனன் தென் இந்தியாவிற்கு எதிராக போர் தொடுத்து சிங்கள மக்களை பாதுகாததான் அவர்கள் இடம் பெயர்ந்து செல்வதைத் தடுத்தான். இதுவே பிரேமதாசா கூறிய தாதுசேனன் பற்றிய விளக்கமாகும்

இந்த சந்தர்ப்பம் இன்றும் தென் இலங்கையில் நிலவுகின்றது என்பதனையே இக்கதை மூலமாக பிரேமதாசா எடுத்துக் காட்டியுள்ளார்.

-உமா-

லலித் அத்துலத் முதலி, காமினி திசாநாயக்கா தலைமையிலான கட்சி இந்தியப் பின்னணியைக் கொண்டு செயல்படுகின்றன என்றும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அந்தத் தன்மையானதே என்றும்,

அவர்கள் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திலேயே செயற்படுகின்றார்கள் என்றும் கூறி அவர்களிடம் இருந்து காப்பாற்றும் இரட்சகனாக நான் இருக்கிறேன் என்பதை உணர்த்த பிரேமதாசா விரும்புகிறார்.

சிங்களப் பௌத்தர்களின் இரட்சகனாக மக்கள் மத்தியில் கொண்டுவர. மக்கள் மனதில் அதனை பதிய வைப்பதற்கு பிரேமதாசா இக்கதையினை கூறியுள்ளார்

மறுவளமாக தாதுசேனனுக்கு உதவியாக இருந்த மகாநாம தேரர் மீண்டும் வரமாட்டாரா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார்

இராணுவத்தின் பாதுகாப்பில் இருக்கும் சிங்கள மக்கள் அச்சங்காரணமாக தென் இலங்கைக்கு சென்றுகொண்டிருக்கும் வேளையில் அவர்களுக்கு உற்சாக மூட்ட மீண்டும ஒரு மகாநாம தேரர் எழுச்சி பெற மாட்டாரா என்று கேட்பதைப் போலவே பிரேமதாசாவின் இந்த அறிவிப்பு இருக்கின்றது.

மகாநாமதேரரின் பின்னணி குறித்து எடுத்துக் கொண்டால் இவர் யார் என்பதை முதலில் தெரிந்து கொள்ள லாம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாக இருந்த மகாவம்சத்தை எழுதியவர்; பௌத்த மதம் பேணிப் பாதுகாக்கப்படுகின்ற தீவாக இலங்கையை வர்ணித்தவர்; ஆரியரின வருகையுடன் சிங்கள மொழியின் அறிமுகத்துடன் இலங்கையில் நாகரிகம் தோற்றம் பெற்றது என்று கூறியவர்; பொதுவாகக் கூறின் தமிழர்களுக்கு எதிரான உண்மைக்குப் புறம்பான கட்டுக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு 'வரலாற்று நூலை' எழுதியவர். இவர்தான் மகாநாம தேரர் இவரின் உதவியுடன் தான் தாது சேனன் சிங்கள மக்களை மீளக் குடியமர்த்தினான்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் காலம் காலமாக இருந்து வந்த தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் பிடிக்கப்பட்டிருந்தது பிடிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டன.

குறிப்பாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஆற்றங் கரைகளையொட்டி திராவிட பண்பாட்டுக்குரிய தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். பின்னர் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்கள அரசர்களின் படையெடுப்புக்களால் அவர்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டன நிலையாக வாழ்ந்த மக்களை நாடோடிகளாக மாற்றிய சிங்களமன்னர்களின் படையெடுப்புகள் பின்னர் படிப்படியாக சிங்கள குடியேற்றங்களாக மாற்றப்பட்டு இன்று சிங்களக் கிராமங்களாக பரிணமித்து இருக்கின்றன

கல்லோயாத்திட்டம், துரித மகாவலி அபிவிருத்தி திட்டம் என காலத்திற்கு ஏற்றவாறும், தேவைக்கேற்றவாறும் சிங்களக் குடியேற்றங்களுக்கு காரணம் கற்பித்தனர். இவ்வாறு குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் பாதுகாப்பிற்கு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன

தண்ணீர் எடுப்பதற்கு வயலில் நெல் விதைப்பதற்கு, களை பிடுங்குவதற்கு, அறுவடை செய்வதற்கு இராணுவம் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குகின்றது

அண்மைக் காலங்களில் இவ்வாறாக அமைக்கப்பட்ட இராணுவமுகாம் மீது புலிகள் அடுத்தடுத்து நடத்திவரும் அதிரடித் தாக்குதல்களினால் கிலி கொண்ட ராணுவமும், சிங்கள மக்களும் தென் இலங்கை நோக்கி புலம் பெயர்கின்றனர்.

இந்தக் கட்டத்தில் மீண்டும் ஒரு மகாவம்சத்தை உருவாக்க, மீண்டும் ஒரு மகாநாம தேரர் வரமாட்டாரா என்ற ஏக்கத்தை வெளிப்படுத்தும் வகையிலே பிரேமதாசாவின் இப் பேச்சு அமைந்துள்ளது.

இந்த வகையில் கலாவெவவில் பிரேமதாசாவினால் ஆற்றப்பட்ட பேச்சானது மக்களை கவருவதற்காக கூறப்படும் பௌத்த ஜாதகக் கதைகளைப் போலல்லாது ஒரு வரலாற்றுக் கதையினைக் கூறி இரு கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் விதைக்க முற்பட்டுள்ளார்.

சிங்கள பௌத்தர்களின் இரட்சகர் பிரேமதாசா என்பது ஒன்று; மகாவம்சம் போன்ற 'வரலாற்று' நூலினை எழுதுவதற்கு மீண்டும் ஒரு மகாநாம தேரர் பிறக்கமாட்டாரா என்பது மற்றொன்று.

ஈழநாதம்

# பயங்கரவாத நாடாக பாகிஸ்தானை அறிவிக்குக

## - பிரிட்டனிடம் இந்தியா கோரிக்கை

[லண்டன்]

பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாக அறிவிக்கும்படி இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜரை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாகிஸ்தான், இந்தியாவில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்களுக்கு உடந்தையாக இருந்து அவற்றிற்கு ஊக்கமும் அளித்து வருகின்றது என அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் லண்டனில் ஜோன் மேஜரும், எஸ்.பி. சவானும் சந்தித்துக் கொண்டனர். இந்தியாவின் கருத்துகளையும், உணர்ச்சிகளையும் தாம் ஏற்பதாக ஜோன்மேஜர் தெரிவித்தார்.

ஐரோப்பிய சமுதாயத்தின் ஏனைய உறுப்பினர்களோடு ஆலோசித்து பிரிட்டிஷ் சட்டத்தின் கட்டமைப்புக்குள் பயங்கரவாதத்தை எதிர்த்து முறியடிப்பதற்கான முயற்சியில் இந்தியாவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக ஜோன் மேஜர் தெரிவித்தார்

## St. Patrick's College Jaffna

## பிரவேச விண்ணப்பம்-1993

பின்வரும் வகுப்புகளுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு :- 01-02-87 — 31-08-88க்குள் பிறந்திருக்க வேண்டும்.
நான்காம் ஆண்டு;- 1984 இல் பிறந்திருக்க வேண்டும்
ஆறாம் ஆண்டு :- 1982 இல் பிறந்திருக்க வேண்டும்
ஒன்பதாம் ஆண்டு:- 1979 இல் பிறந்திருக்க வேண்டும்

★ விண்ணப்பப்பத்திரம் ரூபா 75.00 (பரீட்சைக் கட்டணம் உட்பட) 01-10-1992 தொடக்கம் 21-10-1992 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில் வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 24-10-1992-ம் திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9-00 — 12-00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ பிரவேசப் பரீட்சைத்தினம் 07 - 11 - 1992 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

★ 6ஆம், 9ஆம் வருட வகுப்புகளுக்கு நடாத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ். ஆயரது புலமைப்பரிசில் வழங்கப்படும்.

★ கத்தோலிக்க மாணவரெனின் அதை அத்தாட்சிப் படுத்தும் பங்குத்தந்தையின் கடிதமொன்றை விண்ணப்பப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணபபங்களும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

—கல்லூரி அதிபர்

(சி-5111)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

## இன்று நடைபெறாது

மாணவர்களுக்கான வாரந்தோறும் நடைபெறும் அறிவியல் கருத்தரங்கு தொடர் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறமாட்டாது என்பதை மாணவர்களுக்கு வி. பு. மா. அமைப்பு அறியத்தருகின்றது. இத்தொடர் அடுத்த வாரம் நடைபெறும்.

வட பிராந்திய
சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
யாழ். கிளை - 1

தியாகி
லெப். கேணல் திலீபன்

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

தமிழீழ மண்ணில் வித்தாக முளைத்த தியாகி திலீபா! - நீ உதிர்த்த உணர்வலைகளின் பின் நாம் சென்றிடுவோம்.

நாளை (26 - 09 - 1992) சனிக்கிழமை சகல தொழில் நிலையங்களையும் மூடி காலை 7 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் நடைபெறும் "தியாகி திலீபனின்" இறுதி உண்ணாவிரதத்தில் சகலரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
சங்க நிர்வாகம்

1083, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (3209)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



## 'வணிகத்தளிர்' வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட ஆங்கிலப் பாடசாலையின் வர்த்தக மாணவர் ஒன்றியத்தினரின் ''வணிகத்தளிர்'' என்னும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சிறப்புற நடைபெற்றது.

மேற்படி பாடசாலையின் வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் மூன்றாவது நூலாகிய இந்நூலின் வெளியீட்டு விழாவிற்கு மன்றத்தலைவர் பா. அனுதா தலைமை வகித்தார்.

தொடக்கவுரையை கல்லூரி அதிபர் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வர்த்தகத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினர் உரையை கே. கே. அருள்வேல் அவர்களும், ஆசியுரையை நா. க. சண்முகநாதபிள்ளை அவர்களும், சமர்ப்பண உரையை திருமதி நி தெய்வேந்திரா அவர்களும் நிகழ்த்தினர். தொடர்ந்து மேற்படி கல்லூரியில் இருந்து கடந்த சில ஆண்டுகளில் பல்கலைகழக அனுமதி பெற்ற மாணவர்கள் தங்கம், வெண்கலம், வெள்ளி பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இந்நூலின் வெளியீட்டு உரையை சி. வேலாயுதம் அவர்கள் நிகழ்த்தினார். இதன் முதற் பிரதியைக் க. கனகராசா அவர்கள் பெற்றுக் கொண்டார். இச்சஞ்சிகையின் விமர்சன உரையை வ. க. பாலசுப்பிரமணியம் அவர்கள் நிகழ்த்தினார். நன்றி உரையை மன்றச் செயலாளர் ம. வீணா நிகழ்த்தினார் இறுதியாகக் கல்லூரியின் கீதம் இசைக்கப்பட்டு விழா இனிது நிறைவேறியது

(பா)

## பொலிஸ்

பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பதிகாரியாக இருந்தவர் எனவும் புலிகளின் அச்சுறுத்தலாலேயே கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டாரென்றும் தெரிவிக்கப்படுகிறது

## சயனைட்

துள்ளனர்

நேற்று வெள்ளவத்தை சர்வதேச பௌத்த நிலைய வீதிக்கு அண்மையில் வைத்து இவர் கைது செய்யப்பட்டபோது அவர் உடனடியாகச் சயனைட்டை உட்கொண்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவரின் பெயர் குணசிங்கம் யோகச்சந்திரன் எனவும் மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்தவர் எனவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

## எழுச்சி

அனைத்துப் பகுதிகளிலும் செயற்படும் பொது அமைப்புக்கள், சங்கங்கள் போன்றவை எழுச்சி நாள் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

நேற்றும் அனைத்துப்பகுதிகளிலும் தியாகி திலீபனின் அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளில் அதிகளவு மக்கள் பங்குபற்றினர் [க]

## அடுத்த

கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், இக்கப்பலில் வருகின்ற பொருள்கள் அடங்கிய பட்டியல் சில தினங்களில் யாழ். செயலகம் வந்து சேரும் என்றும் யாழ் அரச அதிபர் மேலும் தெரிவித்தார் (பா)

## பாட்டாளி

பஸ்கள் மீது கல்லெறிகிறார்கள் பஸ்களைத் தீயிட்டு எரிக்கிறார்கள் இன்று கூட திண்டிவனத்துக்கு அருகில் புகையிரதப் பாதையில் பாறாங்கல் வைத்தார்கள் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டார். இவ்வாறான செயல்களில் ஈடுபடும் கட்சியை மத்திய அரசு உடனடியாகத் தடை

## "திலீபன்" பதினொராம் நாள் 25-9-92

தன்னிலை அறியாமல் தவமகன் புரண்டான்
கண்ணினை மூடிக் கனவிலே மிதந்தான்
புன்னகை தவழும் முகமது - பொசுங்கியது!
சன்னம் துளைத்துஞ் சாகாவுடல் .. சரிந்தது!

துளிநீரும் காணாமல் பதினொருநாள் ஓடியதால்
விழிமூடிப் பூந்தளிர் அசைவின்றி விழுந்தது!
சுழியோடிக் கடல்நடுவே நாம்பெற்ற 'வலம்புரி'
மொழியின்றி எம்முன் மூச்சிழுத்து வருந்தியது!

நேற்றுப் பிடித்துவந்த வாகைமரப் பொன்வண்டு
காற்றோடு சேர்ந்து காணாமல் போகிறது !
ஊற்றாக எம்முள் ஓடிவந்த மாவலி நீர்
சீற்றமுடன் கடலோடு கலப்பதற்குச் செல்கிறது !

பெரும் புயல் கூடப் பெயர்க்காத இரும்புடல்
அரும்பிடும் வயதில் அகிம்சைக்காய் வாடியது !
குறும்பினைக் கொட்டிச் சிரித்திடும் பெருமகன்
வருந்திய நாட்களின் இறுதியும் ..வருகிறது !

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## அ.தி.மு.க - காங்கிரஸ் 2-வது நாளாக மோதல்

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவையில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும், அமைச்சர்கள் உட்பட ஆளும்கட்சி உறுப்பினர்களுக்கும இடையே நேற்று இரண்டாவது நாளாக கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நடப்பு நிதியாண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கை மீது இந்திரா காங்கிரஸ் சார்பில் கடைசியாகப் பேசிய பீற்றர் அல்போன்ஸ் தமிழகத்தில் சிறையில் சாதல் கடந்த ஆண்டுகளைக் காட்டிலும், இந்த ஆண்டு ஒட்டுமொத்தமாக அதிகரித்துள்ளன இந்த வகையில் பத்தொன்பது பேர் உயிரிழந்துள்ளார்கள் தமிழகத்தில் இளம் குற்றவாளிகளின்எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்றும், சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து வருகிறது என்று சில பத்திரிகைகளை மேற்கோள் காட்டிப் பேசினார். அவரது பேச்சுக்கிடையே முதலமைச்சர் ஜெயலலிதா, அமைச்சர்கள்கிருஷ்ணசாமி, அரங்கநாயகம், முத்துசாமி, செங்கோட்டையன், திருமதி இந்திரகுமாரி ஆகியோர் குறுக்கிட்டனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டுக் கடைசியில் இயல்பாகவே நிலைமை வழமைக்குத் திரும்பியது.

## யோகாசன கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பெண்களின் நோய்கள் சம்பந்தமான யோகாசனக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் ஆதரவில் யாழ் திவ்வியஜீவன சங்கமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## விதை

றன. சுமார் 150 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கு முதற்கட்டமாக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது. (க, பா)

## யாழ். குடாநாடு

கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயத்தில் திலீபனின் நினைவு நிகழ்ச்சிகளும் இலக்கிய தினவிழாவும் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. திலீபனின் நினைவுரைவுகளை கவிஞர் மு வே. யோ. வாஞ்சிநாதன நிகழ்த்தவுள்ளார்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய கொத்தணி அதிபர் றட்ணராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நாளை ஊரெழுவில் உள்ள திலீபன் நினைவாலயத்திலிருந்து தூக்குக்காவடி ஒன்று புறப்பட்டு நல்லூரை வந்தடையும்.

இதேவேளை நல்லூர் வீதியில் செல்லையா தருமசேனன் என்பவர் மூன்றுநாள் தொடர் உண்ணா விரத நோன்பினை

வும்.

★ பிரவேசப் பரீட்சைத்தினம் 07 - 11 - 1992 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

★ 6ஆம், 9ஆம் வருட வகுப்புகளுக்கு நடாத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ். ஆயரது புலமைப்பரிசில் வழங்கப்படும்.

★ கத்தோலிக்க மாணவரெனின் அதை அத்தாட்சிப்படுத்தும் பங்குத்தந்தையின் கடிதமொன்றை விண்ணப்பப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.


★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

–கல்லூரி அதிபர்

(சி-5111)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகு 28 – 07 – 1929



விண்ணுலகில் 26 – 09 – 1991

## சவரிமுத்து கிறிஸ்ரி (பேபி)

செபம்

நித்திய பிதாவே ! பெற்றோர் பந்துக்கள் சினேகிதர் உபகாரிகளைத் தக்கவிதமாக நேசித்து அவர்களுக்கு வேண்டிய உதவி செய்யக் கற்பித்தருளினீரே. ஆகையால் எங்களைப் பெற்று அன்போடு வளர்த்து ஆதரித்து மரித்த சவரிமுத்து கிறிஸ்ரி அவர்களின் ஆத்துமத்தை இரக்கமாகக் கண்ணோக்கி உத்தரிப்பு ஸ்தலத்து வேதனை நீங்கி நித்திய காலம் உம்மைச் சந்தோஷமாய்த் தரிசித்துக் கொண்டிருக்கக் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மைத் தயவுடன் மன்றாடுகிறோம்.

கிறிஸ்ரியின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 25-09-92 வெள்ளிக்கிழமை இன்று மாலை 4.30 மணிக்கு யாழ். அடைக்கல மாதா ஆலயத்திலும் 27-09-1992 ஞாயிற்றுக் கிழமைமாலை5.00மணிக்கு மானிப்பாய்புனித அந்தோனியார் ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இவ் இரங்கற் திருப்பலியில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், ஞானப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

99/13,
புகையிரத நிலைய ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(3271)

தமிழீழ மண்ணில் வித்தாக முளைத்த தியாகி திலீபா! - நீ உதிர்த்த உணர்வலைகளின் பின் நாம் சென்றிடுவோம்.

நாளை (26 - 09 - 1992) சனிக்கிழமை சகல தொழில் நிலையங்களையும் மூடி காலை 7 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் நடைபெறும் "தியாகி திலீபனின்" இறுதி உண்ணாவிரதத்தில் சகலரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
சங்க நிர்வாகம்

1083, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(3209)

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## வீரவேங்கை சேகர்

[தங்கராசா ஸ்ரீஸ்கந்தராசா (காந்தன்)]

வீரஜனனம் 15.04.1974

வீரச்சாவு 26.08.1992

வீரனுக்கு வயதில்லை வரம்பில்லை - நீ
வீறு கொண்டெழுந்த புலிப்பிள்ளை
வேலுப்பிள்ளை மகன் தந்த சொல்லை - கேட்டு
வேற்றார்க்கு கொடுத்தாயே பெருந்தொல்லை.

வீண்பிள்ளை என்பிள்ளை நீயில்லை - ஈழம்
விடிகின்ற தூரமோ யினியில்லை
விழ்கின்ற புலியென்றும் சாவதில்லை - கண்ணீர்
வார்க்கின்றோம் இதற்கேது எல்லை.

25- 09- 92 இன்று எமதில்லத்தில் நடைபெறும் அஞ்சலியில் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

சுப்பர் மடம்,
பருத்தித்துறை

- குடும்பத்தினர்

(3269)

### அடுத்த

கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், இக்கப்பலில் வருகின்ற பொருள்கள் அடங்கிய பட்டியல் சில தினங்களில் யாழ். செயலகம் வந்து சேரும் என்றும் யாழ் அரச அதிபர் மேலும் தெரிவித்தார் (பா)

### பாட்டாளி

பஸ்கள் மீது கல்லெறிகிறார்கள் பஸ்களைத் தீயிட்டு எரிக்கிறார்கள் இன்று கூட திண்டிவனத்துக்கு அருகில் புகையிரதப் பாதையில் பாறாங்கல் வைத்தார்கள் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டார். இவ்வாறான செயல்களில் ஈடுபடும் கட்சியை மத்திய அரசு உடனடியாகத் தடை செய்ய வேண்டும் என்றார் அவர்

இதேநேரம் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் கைது செய்யப்பட்டதை அடுத்துத் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### அடையாள

லகத்திற்கு வருகை தரவேண்டாம் என்றும், உரிய முறையில் அவை தபால் மூலமோ உதவி அரசாங்க அதிபர் மூலமோ, பாடசாலை அதிபர் மூலமோ விநியோகிக்கப்படுமென்றும், எவருக்கும் அடையாள அட்டைகள் நேரில் வழங்கப்படமாட்டாது என்றும் செயலகத்தில் இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் தெரிவித்தார் (42)

### சிறிலங்கா

தகராறு ஏற்படுத்தும் விடயங்களை அவர் தவிர்த்ததுடன், தென் ஆசியப் பிராந்தியத்தில், இந்தியாவின் ஆதிக்கம் பற்றிய செய்தியாளரின் எந்தவிதக் கேள்விகளுக்கும் பதில் கூறுவதிலிருந்து விலகிக் கொண்டார்.

### இராணுவத்தின்

தால் ஒருங்கிணைக்க முடியுமா என்பதே இன்றுள்ள கேள்வி.

ஆனால் சில பகுதிகளில் பிரதேசத்தைப் பாதுகாக்க மரபு ரீதியான போர்முறையையும், சிலபகுதிகளில் தாக்குதலும் தவிர்தலும் என்ற போர் யுக்தியையும் சில இடங்களில் இராணுவத்திற்கு பெருமளவில் உயிரிழப்பையும் அழிவையும் ஏற்படுத்தக்கூடியகரந்தடி முறையிலும் தாக்குதல்களையும், எதிர்த் தாக்குதல்களையும் நடத்தும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு நிலையினை இராணுவத் தந்திரோபாயம் வகுத்தலென்பது இராணுவத் தரப்பிற்கு என்றும் சவாலானதொன்றாகவே இருக்கும்.

வருகிறது என்றும், சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து வருகிறது என்று சில பத்திரிகைகளை மேற்கோள் காட்டிப் பேசினார். அவரது பேச்சுக்கிடையே முதலமைச்சர் ஜெயலலிதா, அமைச்சர்கள்கிருஷ்ணசாமி, அரங்கநாயகம், முத்து

### யாழ். குடாநாடு

கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயத்தில் திலீபனின் நினைவு நிகழ்ச்சிகளும் இலக்கிய தினவிழாவும் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. திலீபனின் நினைவுரைவுகளை கவிஞர் மு வே யோ வாஞ்சிநாதன நிகழ்த்தவுள்ளார்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் இணைந்து இன்று பாடசாலையின் வகுப்பறைகளை துப்பரவு செய்தல், வழிபாட்டிடத்தை புனரமைத்தல், மைதானத்தை சீரமைத்தல் போன்ற சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் இன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நிகழவுள்ளது. இதில் இப்பகுதி பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடமராட்சி செம்பியன் பற்று தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

தீவகப்பகுதி விடுதலைப் புலிகள் மாணவர் அவையினரால் நேற்று யாழ். வைத்தீஸ்வர வித்தியாலத்தில் அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நிகழ்த்தப்பட்டது. இந்நினைவு விழாவில் திரு புலேந்திரன் பிரதம விருந்தினராகவும் விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட தளபதி செல்வராசா, தீவக தளபதி செழியன், தீவக அரசியல் நிர்வாக பொறுப்பாளர் சேரலாதன் ஊர்காவற்றுறை

டபத்தில் நடைபெறவுள்ளது.

### விதை

றன. சுமார் 150 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு முதற்கட்டமாக யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்படவுள்ளது. (க, பா)

கொத்தணி அதிபர் றட்ணராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நாளை ஊரெழுவில் உள்ள திலீபன் நினைவாலயத்திலிருந்து தூக்குக்காவடி ஒன்று புறப்பட்டு நல்லூரை வந்தடையும்.

இதேவேளை நல்லூர் வீதியில் செல்லையா தருமசேனன் என்பவர் மூன்றுநாள் தொடர் உண்ணா விரத நோன்பினை நேற்றுக்காலை 7.00 மணிக்கு ஆரம்பித்துள்ளார்.

தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவின் இறுதி நாளான நாளை நல்லூர் கந்தசாமி ஆலய முன்றலிலும் நுணாவில் 190 ஆம் கட்டையிலும வடமராட்சி மாலிச்சந்தியிலும் நடைபெறவுள்ள எழுச்சி பூர்வ உண்ணாவிரத நிகழ்விலும் கலை நிகழ்ச்சிகளிலும் அனைத்து தனியார் கல்வி நிறுவனங்களினதும் பிரத்தியேக வகுப்பு நடத்துனர்கள், மாணவர்கள் ஆசிரியர்கள் அனைவரையும் பூக்கள், பூமாலைகளுடன் கலந்து நினைவு நாளை புனிதப்படுத்துமாறு தனியார் கல்வி நிறுவன ஒன்றிய பொதுச் செயலாளர் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் சகல தர ஊழியர்களும் ஒன்றிணைந்து நாளை காலை முதல் மாலை வரை அடையாள உண்ணாநோன்பினை அனுஷ்டிக்கவுள்ளனர்.

நாளை இறுதி நாள் நிகழ்வில் அனைத்து இறைச்சிக் கடை உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு இறைச்சிக்கடை உரிமையாளர் சங்க சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச, 21, 24, 36)

# உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 24-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5831

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்.

28-9633, 41-9995, 26-5206, 21-1494, 41-9579, 26-7393, 41-4129, 26-3998, 26-6075, 26-2277, 26-9938, 42-3339, 41-5178, 26-7261, 28-3969, 24-6699, 27-1072, 24-3364, 28-1922, 27-7419, 28-2145, 24-4323, 24-7078, 42-2575.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.